இலக்கியக் கொள்கை - 5

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்

ஆ. சிவலிங்கனார்

9

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்

ஆ. சிவலிங்கனார்

I

இலக்கியம்

இலக்கியம் என்ற சொல் 'இல்' என்பதனடியாகத் தோன்றிய தாகும். 'இல்' என்பது 'வீடு'. அதாவது ஒரு தலைவன் தன் மனைவி மக்களுடன் தங்கிக் குடும்பம் நடத்தும் கட்டிடம். அப்படி யின்றிப் பலர்க்கும் பொதுவாகவோ வழிப் போவோர் தங்கிப் போமபடியாகவோ இருக்கும் கட்டிடம் வீடு எனப்படாது; அது 'மன்றம்', 'பொதியில்' எனப்படும். அவ் இல் இருந்து குடும்பத்தைத் தலைவன் அற வழியில் நடத்துவானாயின் அதற்கு 'இல்லறம்' என்று பெயர். இல்லறம் நடத்துபவனுக்கு ஒரு குறிக்கோள் வேண்டும். குறிக்கோள் இலாது நடத்தும் இல்லறம் கெடும். 'இல்' (வீடு) பற்றிய குறிக்கோள் 'இலக்கு' எனப்படும். அவ் இலக்கு பற்றி இயம்புவது, 'இலக்கியம்' எனப்படும்.

'இலக்கியம்புதல்' என்பது 'இலக்கியம்' என நின்றது. இயம்புதல் என்பதற்குப் 'பலரும் அறிய, உரத்த ஒலியில் கூறுதல்'

என்பது பொருள். இயம் என்பது ஒலிக்கருவி. ஒலிக்கருவி மூலம் எழும் ஒலி, பலருக்கும் சென்று கேட்கும். அப்படிக் கேட்குமாறு சொல்வது, 'இயம்புதல்' எனப்படும். அதனால் இயம்புதல் என்ற சொல் தன் அடிச் சொல்லாகிய 'இயம்' என்பதோடு நின்று புதல் இன்றி 'இலக்கு' என்பதனுடன் சேர்ந்து 'இலக்கியம்' என வந்தது.

வாழ்க்கை என்பது இல்லற வாழ்க்கையையே குறிக்கும். மற்றைய வாழ்க்கை அடைமொழியுடன் குறிக்கப்படும், துறவறவாழ்க்கை என்பதுபோல. அற வாழ்க்கை என்றாலும் இல்லறத்தையே குறிக்கும். "அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை"[1] என்றார் வள்ளுவரும். எனவே, இல்லறக் குறிக்கோளை, இல்லற வாழ்க்கையை, இல்லறக் காரணங்களை இயம்பும் சொற்றொடர்களின் அமைப்புகள் இலக்கியம் எனப்பட்டன. சொற்றொடர் அமைப்புகள், உரை நடை வடிவில் இன்றிச் செய்யுள் வடிவில் சுருக்க விளக்கங்கருதிப் பண்டைப் புலவர்களால் அமைக்கப்பட்டன. அதனால் இலக்கியம் என்பது செய்யுள்களைக் குறிப்பதாயிற்று. நாவடைவில் செய்யுள்கள் அடங்கிய நூல்களைக் குறிப்பதாயிற்று.

தமிழ் இலக்கியம்

ஒரு தலைவன், தன் குடும்பத்தை நடத்தும்போது, அவன் வீட்டிலிருந்து செய்யும் அறங்கள் — வாழ்க்கை முறைகள் — இரண்டாக அமைந்தன. ஒன்று, தன் வீட்டினருக்காக — தனக்கும், தன் மனை மக்களுக்குமாக நடத்தும் அறங்கள். மற்றொன்று, மற்றவர்க்காக நடத்தும் அறங்கள். இவ் அறங்களைப் பற்றி பண்டைத் தமிழறிஞர்கள் செய்யுள்கள் யாத்தனர். அவைகள் பெரும்பாலும் தனித் தனிச் செய்யுள்களே. அகநானூறு புறநானூறு முதலிய தொகுப்பு நுல்களில் உள்ள பாடல்களைக் காணலாம். பத்துப் பாட்டில் காணப்படும் செய்யுள்களும் நீண்ட தனிச் செய்யுள்களே. இப்படிப் பல இலக்கியங்கள் தமிழில் தோன்றின.

தமிழ் இலக்கியக் கொள்கை

1. அவ்விலக்கியங்களை — செய்யுட்களைக் கண்ட தமிழ் அறிஞர்கள், அவைகளை வகைப்படுத்தினார்கள். ஒரு தலைவனின் குடும்ப நிகழ்ச்சிகளை அதாவது, அக் குடும்பத்தினரே தங்களுக்குள் சொல்லிக் கொள்வதும் நினைத்து இன்புறுவதுமான நிகழ்ச்சிகளை அகப் பொருள்கள் என்றும், அக் குடும்பத்தினர் தங்களுக்குள்ளும் பிறர்க்கும் வெளிப்படையாக எடுத்துக் கூறக்

1. திருக்குறள் — 49

கூடிய நிகழ்ச்சிகளைப் புறப் பொருள் என்றும் வகைப்படுத்தினர்[2] அந் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் செய்யுள்களையும் அகச் செய்யுள், புறச் செய்யுள் என்றனர். எனவே காணப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் கொண்டு 'அக இலககியம்', 'புற இலக்கியம்' என வகுத்துக் கொண்டதே தமிழன் கண்ட முதல் இலக்கியக் கொள்கை எனக் கொள்ளலாம்

2. காணப்பட்ட தமிழ் இலக்கியங்களில் — அகப் பொருள் புறப் பொருள் இலக்கியங்களில் உள்ள பொருள்களின் வகைகளையும், அமைதிகளையும் கண்டு, அவற்றின் மூலம், 'அகப் பொருள்கள் என்பன இப்படிஇருக்கும்;புறப்பொருள்கள் என்பன இப்படி இருக்கும்' என ஒழுங்குபடுத்தி அவற்றுக்கு இலக்கண வரம்பு செய்தனர். அவை அகப் பொருள் இலக்கணம் புறப் பொருள் இலக்கணம் எனப்பட்டன. இலக்கியங்களிலிருந்து இலக்கணம் வகுத்துக் கொள்ளுதல்[3] என்பது இரண்டாவது தமிழ் இலக்கியக் கொள்கையாயிற்று. இவ் விலக்கணங்களை ஒட்டியே இலக்கியங்கள் அமைக்கப் படவேண்டும் என்ற கட்டுப்பாடுபின்னர் வந்தது.

3. இலக்கணங்களுக்கு ஏற்பவே இலக்கியங்கள் அமைக்கப் படல் வேண்டும் என்ற வரம்பு காலப்போக்கில் ஏற்க முடியாத ஒன்றாகியது. அதனால், காலத்துக்கு ஒட்டிய மாற்றங்கள் மேற் கொள்ளப்படலாம் என்ற முடிபுக்குத் தமிழறிஞர் வந்தனர். தலைவன் தலைவியை முதலில் எதிர்ப்பட்டபோது நீரரமகளோ, வானவர்மகளோ என்பனவாக ஐயப்படலாம்; ஆனால், தலைவி தலைவனை ஐயப்படக் கூடாது என்று இலக்கணம் கூறவும்[4]; சேக்கிழார், தமது பெரியபுராணத்தில், சுந்தரரைப் பரவையார் கண்ட முதல் காட்சியில் "முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ"[5] என்றெல்லாம் ஐயப்பட்டதாகப் பாடியுள்ளார். தொல்காப்பியர் கூறிய புறப்பொருள் செய்திகளான போர்ச் செய்திகளின் துறைகளுக்கு மாறாகச் சிலம்பையிசைத்த இளங் கோவடிகள் பாடியுள்ளார்.[6] அவர் பாடியது பின்னர் வந்த

2. தொல்காப்பியம் — பொருளதிகாரம், அகத். 1, நச்சி னார்க்கினியர்
3. அகத்தியம், நூற்பா, இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்.
4. தொல்காபபியம், பொருள், பொருளியல் 42.
5. பெரியபுராணம் —தடுத்தாட்கொண்ட புராணம் 144
6. சிலப்பதிகாரம் — வஞ்சிக் காண்டம்.

ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலைக்குத் துணை புரிந்துவிட்டது. இப்படிக் காலத்துக் கேற்ப இலக்கண விதி களையும் மீறலாம் என்ற கொள்கையையும் தமிழ் இலக்கியம் ஏற்றது.

4. தனிமனிதனின் குடும்ப வாழ்க்கை மட்டுமன்றிக் கூட்டு வாழ்க்கையும் அரசர் அந்தணர் வணிகர் வேளாளர்என்ற தொழிற் பிரிவினரின் வாழ்க்கையும் கூறி வந்த தமிழறிஞர், வாழ்க்கைத் தொடர்கதைகளையும் கூறினர். அப்படிக் கூறிவந்ததில் பெரும் பாலும் அரசர் வாழ்க்கையே கூறப்பட்டது. சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலிய நூல்கள் அரசர்களைப் பற்றியனவே. தனி மனிதனின் தொடர் வாழ்க்கையையும் கூறின. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றன அவற்றில் அடங்கும். அவற்றைப் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்றனர். மேலும் பல்வேறு பொருள்களைப் பற்றிச் செய்வன எல்லாம் இலக்கியங்களாயின குண்டூசி முதல் இமயம் அளவாக உள்ள பொருள்களைப் பற்றி யெல்லாம் இலக்கியம் எழுந்தன. எனவே பல்வேறு துறைகளில் இலக்கியம் படைக்கலாம் என்ற கொள்கை எழுந்தது.

5. மனித வாழ்வு பற்றிய இலக்கியங்களே மிகுதியும் தோன்றின. வாழ்க்கையின் பயனாக — வாழ்ந்ததின் பயனாகச் சிறந்தது (வீடுபேறு) பயிற்றல் வேண்டும் என்றார் தொல்காப் பியர்.[7] வீடுபேற்றுக்கு வேண்டியவைகளைப் பழகுதல் என்பது பொருள். அதற்குக் கடவுள் உணர்வு வேண்டும். கடவுள் வழி பாடு வேண்டும். அவை பற்றியும் இலக்கியம் படைக்கலாம் என்ற கொள்கையினர் ஆயினர் தமிழறிஞர். அதனால் எழுந்தனவே தோத்திர நூல்களும் சாத்திர நூல்களும்.

சமயங்கள் பல. அவற்றின் அறிஞர்கள் தத்தம் சமயங்களுக் கேற்பச் சாத்திர நூல்களை யியற்றினர். சைவ சமய அறிஞர் களுள் சித்தாந்த சைவ அறிஞர்கள், தமது கொள்கைக்கேற்ற பல நூல்களை — இலக்கியங்களைப் படைத்தனர். படைக்கப்பட்ட சித்தாந்த சாத்திர நூல்களுள் மிகச்சிறப்புடையனவாகச் சித்தாந்த சைவர்களால் போற்றப்பட்டும், படிக்கப்பட்டும், விளக்கப்பட்டும் வரும் சாத்திரங்கள் பதினான்கு.

இன்றைய ஆய்வாளர் கூறும் இலக்கியக் கொள்கை

இன்றைய இலக்கிய ஆய்வாளர்கள் உலக மொழிகளின் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் உள்ள அமைப்புகளைக் கூர்ந்து

7. தொல்காப்பியம் — பொருளதிகாரம் —கற்பியல் 51.

நோக்கி, ஓர் இலக்கியம் என்பது, 'ஓர் அறிஞனால் தான் எடுத்துக்கொண்ட—கூறவந்த பொருளைப் பாகுபாடு படுத்திப் புறநிகழ்ச்சிகள் பலவற்றொடு தொடர்புபடுத்தி வெளியிடப் படுவது' என்ற முடிபுக்கு வந்தனர். இது உலக இலக்கியம் அனைத்துக்கும் பொது.

"இலக்கியத்துக்குரிய பொருள் (Content), அதன் புறநிலை அமைப்பு (External Structure), வெளியீட்டு முறை (Expression) ஆகிய இம் மூன்றும் எல்லா வகையான இலக்கியங்களுக்கும் அடித் தளங்களாக அமைகின்றன" என்பர், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள்.[8] இக்கூற்றின்படி இலக்கியக் கொள்கை யென்பது, 'ஓர் இலக்கியத்தில் எடுத்துக் கொண்ட பொருளை வகைப் படுத்தி உவமை முதலியவற்றால் விளங்க வெளிப் படுப்பதே' என்பது அறியலாம். இம் மூவகை நிலையிலும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் அமைந்தவாற்றைப் பொதுவாக நோக்கலாம்.

II

சைவசித்தாந்த சாத்திர நூல்களும் ஆசிரியர்களும்

சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கையும் இயற்றிய வர்கள் அறுவர். நூல்கள் பற்றியும் அவற்றின் ஆசிரியர்கள் பற்றியும் அறியவேண்டிய குறிப்புகள் கீழே வருவன:

1. திருவுந்தியார்

இதன் ஆசிரியர், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார். மூன்றடி கொண்ட தாழிசைப் பாக்கள் 45 கொண்டது இந்நூல். தாழிசையின் இரண்டாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் 'உந்தீபற' என்ற தொடர் வருகிறது. மகளிர் கூடி ஒருவரை ஒருவர் எதிர் எதிராகக் கால் உந்திப் பறப்பது போன்று ஆடும் ஆட்டம் 'உந்தி' எனப்படும். அவ்வாறு ஆடும்போது, 'உந்தீபற' என்று சொல்லிக் கொண்டாடுவர். அவ்வாறு ஆடும் மகளிர் கூற்றாக வைத்துப் பாடும் பாடல் தொகுதிக்கு 'உந்தியார்' என்ற பெயர் இட்டனர்.[9] மாணிக்கவாசகர் 'திருவுந்தியாரும்' இது போன்றதே. திருவுந்தியாருக்கு உரை எழுதியவர், சிற்றம்பலவர் என்பவர்.

---

8 தமிழ் இலக்கியக் கொள்கை—1, தொல்காப்பியம்—பக்.3' டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்.

9. தமிழ் இலக்கிய வரலாறு 12 ஆம் நூற்றாண்டு, பக். 715, மு. அருணாசலம் பிள்ளை,

இந்நூலிற் கூறப்படும் பொருள்கள், ஆசிரியர், தம் ஆசிரியர் மூலம் பெற்ற அருள் ஞானமும், சாதனமும், பயனும் (1—6). ஆதார யோகம், நிராதார யோகம், மீதானஞ்சேறல், அதில் நிற்றல் (7—18) இன்புறுநிலை (19—20). இன்புறு நிலைபெற உபாயங்களான தத்துவ உணர்வு, வாசியோகம் (21—22) பாச வீடும் சிவப்பேறுமாகிய பயன் (23—28) பரமுத்தியின் இயல்பு, சிவநெறியின் சிறப்பு (29—31) அணைந்தோர் தன்மை (32—38) பரமுத்தியின் இயல்பு (39-40) உய்யும் நெறி (41—45) குரு வாழ்த்து (44) நூற்பயன் (45) என்பனவாம்.[10]

ஆசிரியர்

உய்யவந்த தேவநாயனாரின் இயற்பெயர் பரமகலியாணன் என்பர் சிற்றம்பலவர். இவர் ஊர்ப் பெயர் தெரியவில்லை. வேங்கடமுதல் குமரி வரையும் ஆங்காங்கே சாத்திர விளக்கம் செய்து வந்தவர். திருவியலூரில் தங்கி யிருந்தமையால் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் எனப்பட்டார். இவர் மாணவர் ஆளுடைய தேவநாயனார். இவர்க்காகவும் மக்களுக் காகவும் திருவுந்தியார் அருளிச் செய்நார். இவரைப் பற்றி வேறொன்றும் தெரியவில்லை. இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. திருவுந்தியார் பாடிய காலம் கி.பி. 1148 என்பர்.[11]

2. *திருக்களிற்றுப்படியார்*

இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். 100 வெண்பாக்கள் உடையது. திருவுந்தியாருக்கு விளக்க நூலாக அமைந்துள்ளது, சிவஞான போதத்துக்குச் சிவஞானசித்தியார் அமைந்தது போல. சம்பந்தர் பாலை நிலத்தை நெய்தல் நிலமாகப் பாடிய செய்தி இந் நூலில் குறிக்கப்படுகிறது.[12] இதை நம்பியாண்டார் நம்பியும் பாடினர்.[13] இச் செய்தி சேக்கிழார் பாடாதது. சேக்கிழாருக்குப் பிற்பட்டவரான உய்யவந்த தேவநாயனார் பாடிய செய்தியைச் சேக்கிழார் பாடாமைக்குக் காரணம் அவர்க்கு அக் கதை எட்டாமையே எனலாம். இந் நூலில் அப்பர், சம்பந்தர், அரிவாட்டாயர், கோட்புலி, சிறுத்தொண்டர், சுந்தரர், திருக்குறிப்புத் தொண்டர், மங்கையர்க்கரசி, மூர்க்கர், மூர்த்தி ஆகிய நாயன்மார்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

10. தமிழ் இலக்கிய வரலாறு பக். 716.
11. மேற்படி பக். 714.
12. திருக்களிற்றுப் படியார், 12
13. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை —கண்ணி 75.

சேந்தனாரும் மாணிக்கவாசகரும் குறிப்பிடப்படுகின்றனர்[14] இதன் காலம் கி.பி. 1178 என்பர்.

ஆசிரியர்

திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரின் மாணவர், அவ்வூரைச் சார்ந்த ஆளுடைய தேவர் என்பவர். அவர் தம் மாணவராகிய திருக்கடவூரினரான இவர்க்குத் தீக்கை செய்து, மாணவராகக் கொண்டு, தமது ஆசிரியரான உய்யவந்த தேவநாயனாரின் திருப்பெயரையே தீக்கைப் பெயராக இட்டு, திருவுந்தியாருக்கு விளக்கமாக ஒரு நூல் செய்யுமாறும் கட்டளையிட்டார். இவர் திருக்கடவூரினராதலின் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்று வழங்கப்பட்டார். தம் ஆசிரியரின் ஆணைப்படியே ஒரு நூலும் செய்தார்.[15] ஆனால் அதைச் சைவ அன்பர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஏன் எனின், இவர் ஆட்டு வாணியக் குலத்தினர். அக்குலம் அக்காலத்தில் இழிந்ததாகக் கருதப்பட்டது. அதனால் இழிகுலத்தார் இயற்றிய நூல் என்று மறுத்தனர். அதைச் சிதம்பரம் நடராசப் பெருமான் சந்நிதியில் களிற்றுப்படியில் வைத்தார் இவர். அப் படிக்களிறு, தன் கையால் அந் நூலை எடுத்து நடராசர் திருவடியில் வைத்தது. அது கண்ட யாவரும் நூலைப் போற்றினர். இந்நூல் களிற்றுப் படியில் வைக்கப் பெற்றுச் சிறந்ததால் திருக்களிற்றுப்படியார் என்ற பெயருடையதாயிற்று. இவரும் 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரே.

3. சிவஞானபோதம்

மெய்கண்டார் செய்தது. 12 நூற்பாக்களையுடையது. அடிகள் நாற்பது உடையது. பொல்லாப்பிள்ளையார் வணக்கமும் அவையடக்கமும் தனிப்பாடல்களாக உள்ளன. 39 அதிகரணங்களும் 81 உதாரண வெண்பாக்களும் உண்டு. நூலும், நூலின் விளக்கமான அதிகரணங்களும், எடுத்துக் காட்டுகளும் நூலாசிரியராலேயே செய்யப்பட்டன என்பர்.

இந் நூற் பொருள் நான்கு இயல்களாகப் பிரித்துக் கூறப்படுகிறது.

1. பிரமாண இயல்—பதி, பாசம், பசு உண்மை கூறுவது. (நூற்பா 1—3)

---

14. தமிழ் இலக்கிய வரலாறு, 12 ஆம் நூற்றாண்டு, பக்.714, மு. அருணாசலம் பிள்ளை.
15. திருக்களிற்றுப்படியார்,

2. இலக்கண இயல்—பசு, பாச, பதி இலக்கணம் கூறுவது (நூற்பா 4—6)

3. சாதன இயல்—பசுவின் சிறப்பிலக்கணம், குரு உணர்த்தும் முறைமை, ஆன்மசுத்தி என்பன கூறுவது (நூற்பா 7—9).

4. பயன் இயல்—பாசநீக்கம், சிவப்பேறு, சீவன்முத்தி ஆகியவை பற்றிக் கூறுவது (நூற்பா 10—12)

இந் நான்கனுள் முதல் இரண்டும் பொது அதிகாரம் என்றும், பின் இரண்டும் உண்மையதிகாரம் என்றும் வகுக்கப்படும்.

இந்நூலுக்குப் பாண்டிப் பெருமாள் விருத்தியுரை என்பது பழைய உரை. சிவஞான சுவாமிகள் விளக்கப் பேருரையும் (மாபாடியம்), சிற்றுரையும் செய்தனர். சிவாகமத் தேர்ச்சியுள்ள சைவர் உரை ஒன்றுண்டு, திருவாவடுதுறையாதீனப் பழைய உரை ஒன்றும் உளது. வேதாந்த சார்பாகவும் உரை வெளி வந்துள்ளது. இந் நூலை இன்று கிறித்தவ சார்பாகவும் ஆராய் கின்றனர்.[16]

ஆசிரியர்

மெய்கண்டார் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பெண்ணாகடம் என்ற ஊரில் பிறந்தவர். அச்சுதகளப்பாளர் என்பவர் இவர் தந்தையார். வேளாண் குடியினர். அச்சுதகளப் பாளர், தமக்குப் பிள்ளைப் பேறில்லாமையால் தம் குருவாகிய திருத்துறையூர்ச் சகலாகமபண்டிதரிடம் தம் மனக் குறையைத் தெரிவித்தார். அவர், தேவார அடங்கல் முறையில் கயிறு சார்த்திப்பார்க்கச் சம்பந்தரது திருவெண்காட்டுப் பதிகத்தின் இரண்டாவது பாடல் காணப்பட்டது. அதில்,

"பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்"[17]

என்ற வரிகளைக் கண்டு மகிழ்ந்து, திருவெண்காடு சென்று முக்குளநீரில் மூழ்கி, இறைவனை வழிபட்டு வருக என்றார். அவ்வாறே வழிபடப் பிறந்தவர் மெய்கண்டார். பிறந்தபோது இடப்பட்ட பெயர் சுவேதவனப்பெருமாள் என்பது. அது வெண்காட்டிறைவன் பெயர். குழந்தை சுவேதவனப் பெருமாளுடன் பெண்ணாகடம் சென்றார் அச்சுதகளப்பாளர். பின்னர்க் குழந்தை தன் தாய் மாமன் ஊராகிய திருவெண்ணெய்

16. புலவர் தெய்வநாயகம்.
17. சம்பந்தர் தேவாரம், 2. 48: 2.

நல்லூரில் வளர்ந்தார். வயது இரண்டரை. ஒருநாள், தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது, வான் வழிச் சென்ற பரஞ் சோதி என்ற முனிவர், குழந்தையைக் கண்டு இறங்கி, அதற்குச் சிவஞான உபதேசம் செய்து, தீக்கை செய்து, தீக்கைப் பெயராகத் தமது குருவான சத்திய ஞானதரிசினிகள் பெயரை வைக்க எண்ணி அதைத் தமிழ்ப்படுத்தி மெய்கண்டார் என்று பெயரிட்டுச் சென்றார்.

மெய்கண்டார், திருவெண்ணெய் நல்லூரில் உள்ள சிவன் கோயிலில்எழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையார் திருமுன்னர்த் தங்கிச் சிவநினைவோடு சிவஞானபோதம் என்ற நூலை இயற்றி உதவினார். இவர் மாணவர் நாற்பத்தொன்பதின்மர் என்பர்.[18] இவர் ஐப்பசி மாதம் சுவாதி நாளில் திருவருட் கலப்பெய்தினார். இவரது காலம் கி. பி. 1238 என்பர்.[19]

4. சிவஞான சித்தியார்

இதன் ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் ஆவர். இந்நூலானது, ''பக்குவ ஆன்மாவானவன், மெய்கண்டார் செய்த நூலினாலே சிவஞான போதம் பெற்று, இந்த நூலினாலே சிவ ஞானம் சித்திக்கப் பெறுகிறான் என்பதைத் தன் பெயரளவிலே உணர்த்துகின்றது'' என்பர்.[20] பரபக்கம்; சுபக்கம் என இரண்டு பாகம் உடையது.

பரபக்கம் : 501 விருத்தப் பாடல்கள் உடையது. உலகாயதன் முதல் பாஞ்சராத்திரி வரை பதினான்கு சமயவாதிகளின் கொள்கைகளைக் கூறி மறுத்துரைப்பது. இப்பகுதிக்கு, திருவொற்றியூர் ஞானப் பிரகாசர், திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர், வேலப்ப பண்டாரம் ஆகியோர் உரை செய்துள்ளனர். சுபக்கம் : 328 விருத்தப் பாடலகள் உடையது. சிவஞான போதத் துக்கு இது விளக்க நூல் ஆகும். எனவே, இதன் முதல்நூல் சிவ ஞான போதமாம். காண்டல் கருதல், உரை என்ற அளவைகள் முதலிற் கூறப்பட்டுள்ளன.[21] இது, சாத்திர நூல் தோத்திர நூல் இவ்விரண்டு தகுதியும் அமைந்த நல்ல இலக்கிய நூல்.

---

18. தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு,
19. சிவஞான போதம் — சிற்றுரை, கழகப் பதிப்பு (1974) மெய்கண்ட தேவநாயனார் வரலாறு.
20. தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு, பக். 268, மு. அருணாசலம் பிள்ளை.
21. சிவஞானசித்தியார்—அளவையிலக்கணம், செய்யுள் 1-14

ஆசிரியர்

அருள்நந்தி சிவாசாரியார், நடுநாட்டில் திருத்துறையூரில் வாழ்ந்தவர். மெய்கண்டாரின் தந்தையார் அச்சுதகளப்பாளரின் குரு. சகலாகம பண்டிதர் என்பது இவர்க்கு மக்களால் வழங்கப் பட்ட காரணப் பெயர். சகல ஆகமங்களையும் நன்கறிந்த வராதலின் அப்பெயர் பெற்றார். கல்விச் செருக்கு இவரிடம் இருந்தது. ஒருகால், தம் மாணவராகிய அச்சுதகளப்பாளரையும் மெய்கண்டாரையும் பார்க்கத் திருவெண்ணெய்நல்லூர் வந்தார். அப்போது மெய்கண்டார், தம் மாணவர்க்குச் சாத்திர நூற் பொருள்களை விளக்கிக் கொண்டிருந்தார். பார்த்த இவர் உடனே சில வினாக்களை விடுக்க எண்ணினார். அருகில் சென்று 'ஆண வத்தின் வடிவம் யாது?' என வினவினார். அதற்கு மெய் கண்டார் 'இது தான்' எனச் சகலாகம பண்டிதரையே சுட்டிக் காட்டினார். உடனே பண்டிதர், ஆணவம் நீங்கப் பெற்றவராய் மெய்கண்டார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அன்று முதல் மெய்கண்டாரின் மாணவரானார். மெய்கண்டார் இவர்க்குத் தீக்கை செய்து அருள்நந்தி என்ற பெயரையும் சூட்டினார். மெய் கண்டார்க்குப் பின்னர் இவர், சாத்திரப் பொருள்களை மாண வர்க்கு உரைத்துச் சிவம் பெருக்கினார். இவர் மாணவருள் சிறந்தவர் மறைஞானசம்பந்தர் என்பவராவார். திருத்துறை யூரில் புரட்டாசிப் பூச நாளில் திருவருட்கலப்பு எய்தினார். இவரது காலம் 13-ஆம நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர்.[22] இவர் இருபா இருபஃது என்றதொரு நூலும் இயற்றினார்.

5. இருபா இருபஃது

இதன் ஆசிரியர் மேற்கூறிய அருள்நந்தி சிவாசாரியாராவர். இந்நூல் வெண்பாவும் ஆசிரியப்பாவும் அந்தாதித் தொடையில் அமைந்த இருபது பாக்களை உடையது. வினாவிடையாகச் சாத்திரப் பொருளை விளக்குவது.

6. உண்மை விளக்கம்

இதன் ஆசிரியர் மனவாசகங்கடந்தார். 55 வெண்பாக்களை உடையது. சைவ சமய சாத்திரம் பயில்வோர் முதலில் பயில வேண்டிய நூல். தத்துவங்களின் அட்டவணை குறித்துள்ளது. நடராசப் பெருமானின் வடிவ அமைப்பின் தத்துவம் கூறப் பட்டுள்ளது.

---

22. தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு, பக். 267, மு. அருணாசலம் பிள்ளை.

ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின் — வேறாகா
நானேது நீயேது நாதனடம் அஞ்செழுத்தும்
தானேது தேசிகனே சாற்று.[23]

என்ற வினாவிற்கு விடை நூல் முழுதும் கூறப்படுகின்றது. இடையிடையும் வினா உண்டு. இதுவும் வினா விடை நூல் என்னலாம்.

ஆசிரியர்

மனவாசகங்கடந்தார் இந்நூலின் ஆசிரியர். திருவதிகை என்ற ஊரினர். இவரும் மெய்கண்டார் மாணவர் என்று உண்மை விளக்கச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது. வேறு வரலாறு ஒன்றும் தெரியவில்லை. காலம் கி.பி. 1100—1200 என்பர்.[24]

7. சிவப்பிரகாசம்

இதன் ஆசிரியர் கொற்றவன்குடி உமாபதி தேவநாயனார் இந்நூல் சிவஞான போதம், சிவஞானசித்தியார் ஆகியவற்றின் உட்பொருள்களையே கொண்டு செய்யப்பட்ட சார்பு நூல் என்பர். 100 பாடல்களைக் கொண்டது. 50 பாடல்கள் பொதுப் பகுதியாகவும், 50 பாடல்கள் சிறப்புப் பகுதியாகவும் அமைந்துள்ளன. பதியிலக்கணம் கூறும் பாடல் உபநிடதக் கருத்தைச் சித்தாந்த வழியில் கூறுகிறது என்பர்.[25] மதுரை ஞானப் பிரகாசர், மதுரைச் சிவப்பிரகாசர், சிதம்பரநாத முனிவர், நல்லசிவ தேவர், அருணந்திதேவர் முதலியோர் உரை வகுத்துள்ளனர்.

ஆசிரியர்

ஆசிரியர் உமாபதிதேவநாயனார் என்ற உமாபதி சிவாசாரியார் ஆவர். இவர் சோழநாட்டுச் சிதம்பரத்தில் தீக்கிதர் மரபில் தோன்றியவர். அதனால், இவர் நடராசரை வழிபடவும் பூசை செய்யவும்சிவிகையில் இவர்ந்து செல்லும் தகுதியினரானார். ஒரு நாள், இவர், தெருவழியே சிவிகையில் சென்று கொண்டிருந்த போது மறைஞானசம்பந்தர் அவ்வழியே பிச்சையெடுத்து வந்து கொண்டிருந்தவர், இவரைப் பார்த்து, "பட்டமரத்தில் பகற் குருடன் போகின்றான" என்றார். இது கேட்ட உமாபதி சிவாசாரியார், பொருள் விளங்கப் பெற்றவராய்ச் சிவிகையினின்றும் இழிந்து, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்; அவர்

23. உண்மை விளக்கம், செய்யுள் — 2
24. தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு, பக். 282, மு. அருணாசலம் பிள்ளை.
25. மேற்படி — 14ஆம் நூற்றாண்டு, பக். 149, மு. அருணாசலம் பிள்ளை.

மாணவரும் ஆனார். இதுகண்ட தீக்கிதர்கள், தம் நெறி தவறி மறைஞானசம்பந்தர்க்கு மாணவரானமை பொறாதவர்களாய்' தம் கூட்டத்திலிருந்து விலக்கு என்று சொல்லிவிட்டார்கள். பின்னர் சிதம்பரத்தின் கிழக்கேயுள்ள கொற்றவன்குடி என்ற ஊரில் தங்கியிருந்தார். ஒருநாள், இவர் நடராசர் ஆலயம் செல்லத் தில்லைத் தீக்கிதர் தடுத்தனர். வருந்தித் திரும்பினார். அன்று பூசைக்காகத் தீக்கிதர்கள் திருக்கோயிலைத் திறந்து பூசைப் பெட்டகத்தைப் பார்க்க, அது காணப் பெறவில்லை. இறைவன் வான்வழியாகத் தாம் உமாபதியின் பெட்டகத்திருப்பதாகக் கூறினார். தீக்கிதர்கள் உமாபதியின் பெருமையுணர்ந்து மீளவும் அவரை அழைத்து வந்தனர்; பூசை புரிவித்தனர்.

பெற்றான் சாம்பான் என்பவர் தாழ்ந்த குலத்தினர். மடைப் பள்ளிக்கு விறகு வெட்டி வந்து தருபவர். சிவபிரான், இவர் பக்குவம் நோக்கி இவர் கனவில் வந்து ஒரு ஓலை கொடுத்து,'இதை உமாபதி சிவாசாரியாரிடம் சேர்க்க' என மறைந்தார். அவ் வோலையில்,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு — படிமிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை

என்ற பாடல் இருந்தது. இதை உமாபதி சிவாசாரியாரிடம் சேர்த்தபோது அவர்கண்டு, இவர்க்குத் தீக்கை மூலம் முத்தி கொடுத்தார். இதை உணராத சாம்பான் மனைவியும் உறவினரும் அரசனிடம் முறையிட, அவனும் உமாபதி சிவாசாரியாரிடம் வந்து வினவி, 'மேலும் ஒருயிர்க்கு முத்தி கொடுத்துக் காட்டுக' என, உடனே அங்கு தம்அபிடேக நீரால் வளர்ந்து காணப்பட்ட முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தார்.

ஒருகால் நடராசப் பெருமான் பெருவிழாவில் கொடியேற் றத்தின்போது கொடி ஏறவில்லை. நடராசப பெருமானின் வான் வழிச் சொல்லால், உமாபதி சிவாசாரியாரைத் தீக்கிதர்கள் வேண்டிஅழைத்து வந்து, அவர் 'கொடிக்கவி' என்ற நான்கு பாடல்களால் அதை ஏற்றுவிக்கப் பெற்றனர்.

இவர் குருவாகிய மறைஞான சம்பந்தர் ஒருநாள் செங்குந்த மரபினரின் வீதிவழிச் செல்லும்போது, அவர்கள் பாவுக்கு (நூல் உரம் பெறுதற்கு) இட வேண்டி வைத்திருந்த கூழைத் தம் கையில் வாங்கி உண்டார். அப்போது கைவழியே வழிந்த கூழினை உமாபதி சிவாசாரியார் ஏற்று உண்டார். இதன் பின்னரே அவர்

இவரை முழுமனதுடன் மாணவராக ஏற்றார் என்ற வரலாறும் உண்டு. இவர் செய்த சாத்திர நூல்கள்7. இவரது காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு என்பர்.[26]

8. திருவருட்பயன்

இதன் ஆசிரியர் உமாபதி சிவாசாரியார். பின்வரும் ஆறு சாத்திர நூல்களையும், இவரே செய்தார். இந்நூல் 100 குறள்களால் ஆனது. 'பதிமுதுநிலை' முதலாக'அணைந்தோர் தன்மை' ஈறாகப் பத்துத் தலைப்புகளையுடையது. இதற்கு நிரம்ப அழகிய தேசிகர் உரை முதலாகப் பல உரைகள் உண்டு.

9. வினா வெண்பா

13 பாடல்கள் கொண்டது. வினாவிடையில் அமைந்தது. இதற்குத் திருவாவடுதுறை நமச்சிவாயத் தம்பிரான் உரையுண்டு

10. போற்றிப் பஃறொடை வெண்பா

95 கண்ணிகள் கொண்ட பஃறொடை வெண்பாவாலாயது. பலர் உரை யெழுதியுள்ளனர்.

11. கொடிக்கவி

சிவ மந்திரங்களின் இயல்பு உணர்த்துவது. கட்டளைக் கலித்துறைப் பாட்டு 1, வெண்பா 3, ஆக 4 பாடல்கள் உள்ளது.

12. நெஞ்சுவிடு தூது

125 கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவாலாயது. தூது இலக்கணம் அமையப் பாடப்பட்டது. தம் ஆசிரியர் தலைவனாகவும் தாம் தலைவியாகவும் கொண்டு நெஞ்சை விளித்து, 'நீ சென்று மாலை வாங்கி வா' எனக் கூறியமைகிறது. நெஞ்சை நோக்கி 'நான் பிரமம் என்பவர்பால் நண்ணாதே' என்று வேதாந்தத்தை மறுக்கிறது.[27]

13. உண்மை நெறி விளக்கம்

4 பாடல்கள் உள்ளது. ஆன்மரூபம் முதல் சிவபோகம் ஈறாகப் பத்துப் பொருள்கள் பற்றிக் கூறுவது. இதைச் சீகாழித் தத்துவநாதர் செய்தார் என்ற கருத்தும் இப்போது ஆராய்ச்சியாளரால் நிறுவப்படுகின்றது.[28]

---

26. தமிழ் இலக்கிய வரலாறு,14 ஆம் நூற்றாண்டு, பக். 160, மு. அருணாசலம் பிள்ளை.
27. நெஞ்சுவிடு தூது, கண்ணி, 111.
28. தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு, பக். 125, 151, மு. அருணாசலம் பிள்ளை.

14. சங்கற்ப நிராகரணம்

20 அகவற்பாக்கள் கொண்டது. மாயாவாத முதல் சைவ வாதம் வரை ஒன்பது சமய வாதங்களைக்கூறி மறுப்பது. இதற்கு ஞானப்பிரகாச தேசிகர் உரையுண்டு.

III

பொருள் (Content)

ஒரு நூலைப் பயின்றவன் அடையவேண்டிய பொருள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு என்பர். "அறம் பொருளின்பம் வீடடைதல், நூற்பயனே" என்பது நன்னூல்.[29] ஒரு நூலின் பயன் அறம் மட்டும் அடைதலும், பொருள் மட்டும் அடைதலும் இன்பம் மட்டும் அடைதலும் வீடுமட்டும் அடைதலும் ஆம் என்றாலும், நான்கையும் அடைவதாய் அமைவதே சிறந்ததாம். நீதி இலக்கியங்களால் அறமும், புறநானூறு போன்றவற்றால் பொருளும், அகநானூறு போன்றவற்றால் இன்பமும், சிவஞானபோதம் போன்றவற்றால் வீடும் அடையும் பயன்களாகக் கூறலாம். என்றாலும் எல்லா நூல்களாலும் முடிவில் உணர்ந்து அடைவது வீடேயாகவேண்டும் என்பாரும் உண்டு. திருக்குறள் அப்படிப் பட்ட நூலே. சாத்திர நூல்களால் அந்நான்கையுமே அடையலாம். எனவே, சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் உட்பொருள், கூறவந்த பொருள், அறம், பொருள், இன்பம் வீடடைதல் என்ற நான்குமே என்னலாம். சிவஞான போத முதலியவற்றால் அந் நான்கும் அடையுமாறு காண்போம்.

அறம்

அறம் என்பது ஏதோ பிறர்க்குக்கொடுப்பது, நல்லது செய்வது என்பன போன்ற புண்ணியச் செயல்கள் என்று மட்டும் எண்ணக் கூடாது. அவைகளும் அறமாம். ஆனால், "அறம்என்பது நல்லது தீயது என்று அறுத்துணர்ந்து நல்லதைச் செய்வதே" என்ற கருத்தே நிலையானதாக அமைதல் வேண்டும்.

காணப்படும் இவ்வுலகம் பாசம் எனப்படும். அது, அவன் அவள் அது என்ற மூன்று வகையில் காணப்படுவது. தோன்றி, நின்று, ஒடுங்குவது; தானாகத் தோன்றாமல் ஒருவனால் தோற்று விக்கப்படுவது; எங்கே ஒடுங்குமோ அங்கிருந்தே தோற்றுவிக்கப் படுவது; ஆணவமலத்தின் காரணமாக உயிர்களுக்காகத் தோற்று

29. நன்னூல் —பாயிரம—பவணந்தி முனிவர்.

விக்கப்படுவது; தான் எதையும் அறியாது; அதனால் தன்னைத் தோற்றுவிக்க ஒரு தலைவனை முதலாகவுடையது; என்றும் உள்ள பொருள் எனினும், காணப்படும் நிலையில் நிலையாதது.[30]

உயிர் என்பது பசு எனப்படும் அது, பலவாகும்; என்றும் உள்ளது. ஆணவமலத்தால் அநாதியே கட்டுண்டது; சிற்றறி வினது; அறிவிக்க அறிவது; முதல்வனால் கொடுக்கப்பட்ட கரணத் தொடு கூடிய உடம்பில் இருந்து உலகத்துப் போகங்களைத் துய்ப்பது; நல்வினை தீவினைகளைச் செய்வதன் மூலம் அவற்றின் பயன்களைப் பல பிறவிகள் எடுத்து அனுபவிப்பது; குரு, இலிங்க, அடியவர் வழிபாட்டால் வீடுபேற்றுக்குரியனவற்றைப் பெறுவது; குருவருளால் ஞானம் கைவரப் பெறுவது; உலகப் பற்றை யொழித்து முடிவில் வீடு பேறடைவது; என்றும்உள்ள பொருள்.[31]

இறை பதி எனப்படும். முற்றறிவினது; உலகைத் தோற்று வித்து அதில் உயிர்களைத் தன்னை அடைதற்குரிய வழி வகை களைத் தேடுமாறு உலவ விடுவது. உயிர்களுக்கு வேறாயும், உடனாயும், ஒன்றாயும் உறைவது; உயிர்களுக்கு வினைகளை விதிப்படி அனுபவிக்கச் செய்வது; குரு, இலிங்க, அடியவர் வடிவில் உயிர்களுக்கு உதவுவது; தனக்குத் தலைவன் இல்லாதது; என்றும் அறிவுமயமாய் இன்பமயமாய் எல்லாப் பொருள்மயமாய், உயிர்கள் அடைந்து இன்புறும் வீடுமயமாய் இருப்பது.[32]

இக்கருத்துகளைச் சைவ சித்தாந்த நூல்களைப் படிப்பவர் உணர்வர். இப்படி முப்பொருள்களையும் அறுத்து (வரையறை செய்து) உணரும் அறிவு பெறுதலே அறப்பயன் பெறுதலாம்.

பொருள்

பொருள் என்பது, இங்கு உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய செல்வப் பொருளன்று. உயிர் வீடுபேறடைதற்குரிய ஞானப் பொருளாம். முன் சொன்னவாறு அறப்பயனை — அறவுணர் வினை அடைந்தவன், வீடுபேறடைதற்கு முயல்வான். அதற்கு அவனுக்குத் துணைப் பொருள்கள் தேவை. அப்பொருள்கள் குரு, இலிங்கம், அடியார் என்பனவே. இலிங்கமாகிய பொருளையவன் கொண்டால், அதற்குரிய சரியை கிரியைகளை மேற்கொண்டு நன்னிலையடையலாம். அடியவர்கள் சிவபரம்பொருளின் இயல்பு களைக் கூறியருள அதுகேட்டு அவர்களை வழிபட்டு நன்னிலை யடையலாம். இவ்விரண்டினையும் விடக் குருவினை வழிபட்டு அவர் உபதேசப்படி, இறைவனைக் கண்டு காட்டக் காணுதலின் மூலம் நன்னிலையடையலாம்.[33] சிவஞான போதத்தில் இவற்றை

30, 31, 32, 33 — சிவஞானபோதம், 1—12.

யெல்லாம் விளக்கமாகக் காணலாம். எனவே சாத்திர நூல்கள் பொருளாகிய பயனையும் தரவல்லன.

இன்பம்

இன்பம் என்பது துன்பத்தின் முடிவு. துன்பம் என்பது இன்பத்தின் முடிவு. அறவுணர்வுடையவன், குரு, இலிங்கம், அடியாராகிய பொருள்களைப்பெற்றால் அவன்அடைவது இன்பமாம். 'உலகம் நிலையாதது; நிலைத்த பொருளை நாம் அடைய வேண்டும்' என்றிருப்பவனுக்குக் குரு, தன் உபதேச மூலமாக உலகப்பற்றறுக்கும் இயல்பினை யுணர்த்துவார். "அற்றது பற்றெனில் உற்றது வீடு"[34] என்ற கருத்தைத் தெளிவு படுத்திப் பற்றற்ற வழிகளை வகுப்பார். "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்,"[35] "பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை"[36] என்பனவற்றைத் தெளிவுபடுத்தவே, அவன், ஒவ்வொரு பொருளாகத் தனக்குத் தொடர்பில்லாதது என்று ஒதுக்கித் தள்ளுவன். அப் பொருளிலிருந்து தான் நீங்குவன். எவ்வெப் பொருள்களை விட்டுப் பற்று அற்று நீங்குகிறானோ, அவ்வப்பொருள்கள் மூலமாக வரும் துன்பம் — நோய் இல்லாதவனாவான். "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்"[37] என்பது வள்ளுவர் வாக்கு. துன்பம் இல்லையெனவே துன்பத்தின் முடிவாகிய இன்பம் எய்துவான். இவ்வின்பம் மன நிம்மதி என்ற அளவில் அமைவதாகும். இதனினும் சிறந்த இன்பம் பற்றற்றவுடன் சென்று சேரும் வீட்டின்பமே யாகும். அவ்வின்பத்தைப் பெறுதற்குரிய வழி வகைகளைக் கூறுதலின் சைவ சித்தாந்த சாத்திர நூல்களால் இன்பப் பயன் பெறலாம்.

வீடு

வீடென்பது சிந்தையும் மனமும் செல்லா நிலைமைத்தாதலின்[38] அதுபற்றி நூல் இல்லை. என்றாலும் முற்கூறிய கருத்துகளின் முடிவு வீடடைதல் என்றலின், வீட்டுப் பயனையும் அச்சாத்திர நூல்கள் தருவன என்னலாம்.

எனவே சைவசித்தாந்த சாத்திரங்களின் முடிந்த பொருளைச் சுருக்கிச் சொல்வதென்றால், "பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் என்றும் உள்ள பொருள்கள். பசு சிற்றறிவுடையது, அது

34. திருவாய்மொழி 16.
35. திருக்குறள். 339.
36. திருக்குறள். 335.
37. திருக்குறள். 331.
38. திருக்குறள். பரிமேலழகர் உரை — பாயிரம்

தன்னைப் பிணித்துள்ள பாசத்தின் நீங்கிப் பதியை அடைதல் வேண்டும். அதற்குக் குருவருள் வேண்டும். அக் குருவாகப் பதியே எழுந்தருளுவன்" என்ற கருத்தையே சொல்லலாம்.

புறநிலை அமைப்பு (External Structure)

இனிச் சைவசித்தாந்த சாத்திரங்கள் தாம் சொல்லவந்த பொருள்களை விளக்க எப்படிப் புறநிலை அமைப்புகளை மேற் கொண்டன எனக் காண்போம்.

சிவஞானபோதம் செய்த மெய்கண்டார், முன்னுள்ள தோத்திர நூல்களாகிய ஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர் மாணிக்கவாசகர் போன்றோரின் தேவார திருவாசகங்கள்போன்ற நூல்களின் தெள்ளி வடித்த பொருளாக அந்நூலைச் செய்தார். டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள் எழுதிய 'திருமுறைத் தெளிவே சிவஞான போதம்' என்ற நூலில் அதை விளக்கமாகக் காணலாம்.[39] 'திருவருளால் அந்நூல் செய்தாராதலின் அவர் எந் நூலையும் பார்த்துச் செய்தாரில்லை. குழந்தைப் பருவத் திலேயே செய்தார், என்ற மரபுக் கருத்தை நாம் ஏற்பினும் அவர் ஓர் இலக்கியம் செய்தார் என்ற அளவில் கொண்டு சில காணுதல் வேண்டும்.

தோத்திர வடிவமான இலக்கியங்களிலிருந்து பதி, பசு, பாசங் களின் இயல்புகளைக் கொண்டு அவைபற்றி இலக்கியம் செய்ய எண்ணினார். அவ்வெண்ணம் அவைபற்றிய இலக்கணங் கூறுத லாதலின், வெண்பா முதலிய செய்யுளில் கூறுதலைவிடத் திட்பம், நுட்பம் முதலிய செறிந்த நிலையில் கூறுதற்கு நூற்பா யாப்பே சிறந்தது என்று கொண்டார். அதனால் 12 நூற்பாக்களை இயற்றினார். தோத்திர நூல்களில் சிதைந்து ஆங்காங்குக் காணப்பட்ட முப்பொருள் இலக்கணங்களைத் தொகுத்து வகைப் படுத்திக் கூறியது இவரது தனிச் சிறப்பாகும். "தன்னுணர்ச்சியை வெளியிடும் விருப்பமும், பிறருடைய வாழ்விலும் செயலிலும் தமக்குள்ள அக்கறையுமே இலக்கியம் செய்வதற்குரிய உணர்ச்சிக் கருத்துகள்" என்பர் டாக்டர். மு. வ. அவர்கள்[40]. அம்முறையின் பிறர்நலங்கருதிச் செய்யப்பட்டதே சிவஞானபோதம். அதனால் மக்கள் மனம் கொள்ளுமாறு அந்நூற்பொருளை விளக்கப் பல

39. திருமுறைத் தெளிவே சிவஞான போதம் — டாக்டர் வை. இரத்தினசபாபதி
40. இலக்கியத்திறன் (1959) பக். 49, டாக்டர் மு. வரதரா சனார்

பிரிவுகளை அமைத்துக் கொண்டார். பொது, உண்மை என அதிகாரம் இரண்டாகவும், இயல்கள் நான்காகவும் பகுத்துக் கொண்டார். மேலும் ஒவ்வொரு நூற்பாவுக்கும் அதிகரணங்கள் பிரித்தும், அவற்றுக்கு உதாரண வெண்பாக்கள் அமைத்தும் கூறியது சிறந்த அமைப்பாகும். இப்படிப் பெரும் பிரிவுகளும் உட்பிரிவுகளுமாக அமைத்துக் கொள்வதைப் புறநிலை அமைப்பு என்பர் திறனாய்வாளர்.

இனிச் சிவஞான சித்தியார் பாடிய அருணந்தி சிவாசாரியார். முதல் நூலாகிய சிவஞான போதத்துக்கு வழிநூலாகச் செய்தாராயினும், அந்நூலின் பகுப்பு முறையை விடாமல் தழுவினாலும் தமது சுபக்கத்தில், முதலில் அளவை இலக்கணங்களைக் கூறித் தமது பகுப்பு முறையில் ஒரு தனித் தன்மையை மேற்கொண்டார்.[41] ஏன் எனின், 'தருக்க முறையில் காட்சி, கருதல், நூல் என்ற அளவையிலக்கணங்களை யறிந்தன்றித் தத்துவப் பொருள்களையுணர முடியாது' என்ற கொள்கையுடையவரானார். இவரைப் பின்பற்றியே தத்துவப் பிரகாச நூலுடையாரும், சிவநெறிப் பிரகாச நூலுடையாரும் முதலில் தருக்கப் பகுதி கூறியே நூல் செய்துள்ளார்கள்.

மேலும் சிவஞான சித்தியாரில் பரபக்கம் என்ற ஓர் பிரிவை முதலில் அமைத்துள்ளார். இவர் இப்படி அமைத்தது, மணிமேகலையில் உள்ள சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதையை நினைவுறுத்துகிறது. அருணந்தி சிவாசாரியாரை ஒட்டியே உமாபதி சிவாசாரியார் சங்கற்ப நிராகரணம் என்ற மறுப்புநூலைச் செய்துள்ளார். இந்நூல் சமய வாதிகளை மறுப்பதற்கென்றே எழுந்த எதிர் நூலாகும். சமயவாதிகள் எதிர்நூல் செய்யும் கொள்கையினர் என இதனால் உணரலாம்.

உமாபதி சிவாசாரியார், திருவருட் பயன் என்ற தமது நூலில், சிவஞான போதத்தில் கூறப்பட்ட கருத்துகளை அந்நூல் கொண்ட புறநிலையமைப்புப் போலாதுவேறுவகையில் வைத்தார் அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்ட வேண்டுமானால் அதற்கு ஏற்றது குறள் வெண்பாவே என்று கொண்டு, 100 குறள் வெண்பாக்களால் நூல் யாத்தார். அதைப் பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியும்நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை எனப் பத்து தலைப்புகள்

41. சிவஞானசித்தியார் — அளவை இலக்கணம் 1—14.

கொடுத்துத் தலைப்பு ஒன்றுக்குப் பத்து குறள்களாக அமைத்தார் இவ்வமைப்பு சாத்திர நூல்களில் இதனிடைமட்டுமேயுண்டு. இவரியற்றிய பிற நூல்களில் புறநிலையமைப்பு என்பதற்கேற்ப பிரிவுகள் இல்லை.

இனித் திருவுந்தியார் என்ற நூலின் புறநிலையமைப்பாகிய பகுப்பு முறையைத் திருவுந்தியார் என்ற தலைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளதையே கொள்ளலாம். இப்பகுப்பு முறைக்குப் பாடல் களின் எண்ணிக்கை ஒன்றுபோல் இல்லை. ஒன்றும், இரண்டும் பலவுமாக அமைந்துள்ளன. திருவருட்பயனின் தலைப்பு போன்ற தலைப்புகளில் அமைந்துள்ளது பகுப்பு முறை.

திருக்களிற்றுப் படியார், திருவுந்தியாரின் விளக்க நூலாக அமைதலின் அந்நூலின் பகுப்பு முறையே இதற்குமாம். மற்றைய நூல்களில் பகுப்பு முறை காண்டல் அரிது. எடுத்துக் கொண்ட பொருளை வினாவிடையாகவும், பொருளியல்புரைத்தலாகவும் அமைத்துக் கொண்டு இயற்றப்பட்டன.

வெளியீட்டு முறை (Expression)

1. *யாப்பு*

கவிதைக்கு வடிவமாக விளங்குவது பா அமைப்பு என்பர்.[42] சைவசித்தாந்த சாத்திர நூலாசிரியர்கள் தாம் கூறவந்த பொருள் களை வெளிப்படுத்தப் பல திறப்பாக்களை மேற்கொண்டார்கள். மெய்கண்டார் தாம் கூறவந்த பொருளைச் சுருக்கமாகவும், யாதொரு கருத்தும் விடுபடாமல் செறிவாகவும், பின்வருவோர் அதன்மூலம் பல்வேறு கருத்துகளைப் பெறுமாறும் அமைக்க எண்ணினார். அதற்கேற்ற யாப்பு வடிவம், நூற்பா வடிவமே என்று கொண்டு 12 நூற்பாக்களை இயற்றினார்.

> சூத்திரந் தானே
> ஆடி நிழலின் அறியத் தோன்றி
> நாடுத லின்றிப் பொருள் நனிவிளங்க
> யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.[43]

என்பது தொல்காப்பியம்.

சிவஞான போதத்துக்கு வழிநூலாகவும் விளக்க நூலாகவும் அமைந்தது, சிவஞான சித்தியார். அதன் ஆசிரியர் அருணந்தி

---

42. தமிழ் இலக்கியக் கொள்கை — 1, பக், 81, க. த. திருநாவுக்கரசு.
43. தொல்காப்பியம்—பொருளதிகாரம்— செய்யுளியல்-162

சிவாசாரியார், நூற்பா யாப்புக் கொண்டால் சுருக்கமாகவே அமைந்துவிடும், என்று எண்ணி, விரிவாக உரைத்தற்கு ஏற்றது விருத்தப்பாவே என்று கொண்டார். அகவற்பாவும் விரிவாகக் கூறுதற்குரியதே என்றாலும் தனித்தனிக் கருத்துகளைக் கூறி நிறுத்துவதற்கு விருத்தப் பாவே சிறந்ததாம். அதனால் அவர் அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தமும் எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தமும் கொண்டார். இவரே, தாம் எழுதிய விரிந்த நூலுக்கு முன்னுரைபோல இருபா இருபஃது என்பதைச் செய்தார். வெண்பாவால் சுருக்கமாகவும் ஆசிரியப்பாவால் சற்று விரிவாகவும் கருத்துகளைத் தெரிவித்தார்.

திருவுந்தியார் என்ற நூல் மாணிக்கவாசகர் இயற்றிய திருவுந்தியாரைப்[44] போலத் தாழிசைகளால் ஆனது. இதுவும் சுருக்கமாகக் கூறுதற்கு ஏற்ற யாப்பாகும். இதன் விளக்க நூலாகிய திருக்களிற்றுப்படியார் வெண்பாவாலானது. திருவுந்தியார் செய்யுள் ஒவ்வொன்றற்கும் ஒன்று, இரண்டு அல்லது மூன்று பாடல்களால் விளக்கம் கூறுவது. அதனால் மிக விரிவாக விளக்கம் கூறுதற்குரிய அகவலையோ விருத்தப் பாவையோ கைக் கொள்ளவில்லை.

சிவப்பிரகாசம் என்ற நூலும் சிவஞான சித்தியார் போன்ற விருத்தப்பா யாப்பே கொண்டது. இதுவும் விரிவான நூலாதலின் திருவருட்பயன் குறள் வெண்பாவாலாயது. இதுவும் சுருக்க நோக்கமே கொண்டது.

போற்றிப்பஃறொடை என்பது ஆசிரிய வணக்கப் பாடல். 95 கண்ணிகளையுடைய வெண்பா. சாத்திரக் கருத்துகளை யுள்ளடக்கி ஆசிரியர், தம்மை யாட்கொண்டவற்றை விரித்து, ஆட்கொண்டமை காரணமாகப் போற்றுவதாக உள்ளது.

நெஞ்சுவிடுதூது, தூதுக்குரிய இலக்கணத்துடன் அமைந்தது. அதுவும் ஆசிரியர் சிறப்பையே சாத்திரக் கருத்துகளை உள்ளடக்கிக் கூறுவது.

சங்கற்ப நிராகரணம் 20 ஆசிரியப்பாவாலாகியது. பிறர் மத மறுதலையாதலின், கருத்துகளைக் கோவைப்படக் கூறுதற்கு ஏற்றது ஆசிரியப் பாவேயாதலின், அந்நூலாசிரியர், அதனையே மேற்கொண்டார்.

44. திருவாசகம் — திருவுந்தியார்.

எனவே எடுத்துக் கொண்ட பொருளை விளக்குதற்கு அவரவரும் தத்தமக்கேற்ற பாவகைகளைக் கொண்டனர் என்னலாம். (பா அமைப்பு: இணைப்பு 4 பார்க்க)

2. உவமை

(1) கருத்தை விளக்க மேற்கொண்ட வழிகளாக உவமை கூறுதல், எடுத்துக்காட்டு தருதல், மேற்கோள் தருதல் ஆகியவற்றை மேற்கொண்டனர். அவற்றுள் உவமையை எல்லா ஆசிரியர்களும் எல்லா நூல்களிலும் கையாண்டுள்ளனர்.

நிலமுதல் நாதம் ஈறாக வுள்ள பாசக் கூட்டங்கள், இறைவன் திருவடி ஞானத்தால் உணரத் தொடங்கும் போது, 'உண்மைப் பொருள் போல் தோன்றிய அவைகள் உண்மைப் பொருள்கள் அல்ல' என நீங்குவதற்குப் பேய்த்தேர் (கானல் நீர்) உவமையாகக் காட்டப்பட்டது. சிவஞானபோதம் ஒன்பதாம் நூற்பாவில் "கானல்நீர், எட்டியிருந்து பார்ப்பவர்க்குத் தண்ணீர் போல் தோன்றிக் கிட்டிச் சென்று பார்க்கும்போது இல்லையாவது போலப் பாசப்பொருள்கள், உண்மைப் பொருள்கள் போல் தோன்றினாலும் திருவடி ஞானத்தால் அணுகும்போது அவை பொய்ப் பொருள்களாய் நீங்கும்" என விளக்கியுள்ளார் மெய் கண்டார்.

> ஊனக்கண் பாசம் உணராப் பதியை
> ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
> உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
> தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே[45]

என்ற அவர் வாக்கைக் காணலாம்.

(2) 'சிவபிரான் எவ்வுயிரிடத்தும் நிறைந்தவன். உயிர்கள் அவனிடம் ஒடுங்கிக் கிடப்பன' என்று சித்தாந்தி கூறக் கேட்டவன், அப்படியாயின் உயிர்கள் அடையும் இன்ப துன்பங்களைச் சிவபரம்பொருளும் அடையுமோ, என்ற வினாவை எழுப்பினான். அதற்கு விடையாக, சித்தாந்தி 'உன் வயிற்றில் புழுக்கள் உண்டு. அதைநீ அறிவாய், அப்புழுக்கள் அடையும் இன்ப துன்பங்களை நீ அடைவதுண்டோ? இல்லை; அது போலக் கொள்க' என்றார்.

> உன்னுதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்
> உன்னுடைய தென்னாய்நீ உற்றனையோ - மன்னுயிர்கள்
> அவ்வகையே காணிங் கழிவதுவும் ஆவதுவும்
> செவ்வகையே நின்றசிவன் பால்[46]

என்பது திருக்களிற்றுப்படியார்.

45. சிவஞானபோதம் 9.
46. திருக்களிற்றுப்படியார், 87.

(3) மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னாலே
எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன் ஈசன் தானும்[47]

எனச் சிவஞான சித்தியார், குலாலன் குடத்தை வனைதல், இறைவன் உலகைப் படைத்தலுக்கு உவமை கூறுகின்றது.

இறந்தோய் கரணங்கள் எல்லாம் எனக்குச்
சிறந்தோய் எனினுமெய்த் தேவே - பிறந்துடனாங்
காயங் கொளவும் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கொல் பாதவத் தற்று[48]

இஃது இருபா இருபஃதிலுள்ளது. இதன் பின்னிரண்டு வரிகளில் கூறப்பட்ட கருத்தாவது; உயிர் உடம்பொடு கூடி அதுவாகவே இருந்தாலும் இறைவன், அருளால்—ஞானத்தால் அவ்வுடம்புடன் கூடாமலும் இருக்கச் செய்தான். இது எப்படி இருக்கிறதென்றால் "இடையன் எறிந்த மரம் போல" இருக்கிறது என்பதாம். (ஆயன் கொல் பாதவம் — இடையன் வெட்டிய மரம்). ஆயன் மரத்தை வெட்டமாட்டான். மரக்கிளையை வெட்டுவான். ஆனாலும் கிளை தனித்துக் கீழே விழுமாறு வெட்டமாட்டான். பாதி ஒடிந்தும் பாதி ஒடியாமலும் இருக்கக் கிளையை வெட்டுவான். வெட்டித் தன் ஆடுகள் உண்ணுமாறு தாழ்த்துவான் இதுவே ஆயன் பாதவத்தைக் கொல்லுதலாம். இதை ஒடியெறிதல் என்றும் வழங்குவர்.[49] அவ்வாறு ஒடிக்கப்பட்ட கிளைதான் மரத்தோடு ஒட்டியிருத்தலின், மரத் தொடர்பு இருந்தாலும் அது தளிர்ப்பதில்லை. அதுபோல உயிர் உடம்பொடு கூடியிருந்தாலும் இறைவனால் ஞானம் தரப்பெற்று வேறுபடுத்தப்பட்டதாதலின்; உடம்பின் தொடர்பற்றே இருக்கும்; உடம்பின் வாதனையைப் பெறாது என்பது அதன் கருத்து.

(4) "—நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உளதறிவின்
நண்ணியறி வித்திடுவோம் நாம்[50]

என்பது உண்மை விளக்கம். "சூரியன் உலகப் பொருள்களைத் தான் கண்டு உயிர்களுக்கு அவற்றின் கண்ணில் நின்று காட்டுவது போல, இறைவனும், உலகத்தைத் தான் கண்டும், உயிர்களின்

47. சிவஞானசித்தியார் —சுபக்கம் 29.
48. இருபாஇருபஃது, 13.
49. நினைவு மஞ்சரி, முதற்பாகம் பக். 34,
50. உண்மை விளக்கம், 27.

அறிவில் நின்று காட்டியும் உதவுவான்" என்பது அதன் கருத்து. இது முதல் நூலாகிய சிவஞானபோதம் கூறும்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே[51]

என்ற கருத்தைத் தழுவியதாகும்.

(5) ஞாயிறு கீழ்த்திசை மேல்திசைகளிற் சார்ந்து நிற்கும் போது அதன் ஒளி சாய்வாகப் படிகத்திற்படும். அப்பொழுது அப்படிகம் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களின் நிறங்களைத் தன்னிறமாகக் கவர்ந்து விளங்கும். ஞாயிறு உச்சியில் வரும்போது அதன் ஒளி நேராகப்படும். அப்பொழுது, படிகம் தன் ஒளி மட்டும் உடையதாக நிற்கும். இங்ஙனம் நிகழ்வதற்கு ஏதுவாயுள்ள ஞாயிறு இவற்றில் தோய்வின்றித் தன் இயல்பாய் நிற்கும். படிகம் ஞாயிற்றின் ஒளியோடு கலந்து நிற்கும்.

அதுபோல ஆருயிரும், தன்னால் சாரப்பட்ட கருவிகளால் வரும் அறிவைப் பெறச் செய்வதும், அக்கருவிகளைவிட்டு நீங்கித் தன் இயல்பாகிய உயிருண்மையைப் பெறச் செய்வதும், மேலாகிய சிவமெய்யுணர்வேயாம். அவ்வாறு கருவிகளும் ஆருயிரும் தன்னால் காரியப்படுத்தப்படினும், அவற்றின் தன்மைகளை அச் சிவ மெய்யுணர்வு பொருந்தமாட்டாது. அஃது இயற்கைப் பேரொளியாகவே நிற்கும். இக்கருத்தமைந்த சிவப்பிரகாசப் பாடல் வருமாறு.

பன்னிறங் கவரும் தொன்மைப்
படிகநீ டொளியும் பன்மை
மன்னிலங் கியல்பும் தந்த
வளரொளி போல வையம்
தன்னகம் பயிலும் நற்சிற்
சடங்களின் தன்மை தாவா
நன்னலம் பெறநி றைந்த
ஞானமே ஞானம் என்பர்.[52]

---

51. சிவஞானபோதம், 11.
52. சிவப்பிரகாசம், 69.

(6) துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை யெண்ணிக் கொண்டற்று[53]

என்ற வள்ளுவர் வாக்குப் போலத் திருவருட்பயனும்,

பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலும்
துறந்தோர் துறப்பார் தொகை[54]

எனக் கூறியதும்,

உயிர்களிடத்து ஆணவமலம் அநாதியே சேர்ந்திருப்பதற்கும், அது உயிர்களுக்கு மறைப்பைச் செய்வதற்கும் உவமைகளாக, நெல்லுக்கு உமியும் தவிடும் முளையும் உடனே தோன்றியதையும், செம்பில் களிம்பு உடன் தோன்றிச் செம்பின் ஒளியை மறுத்ததையும் உவமையாக,

"நெல்லுக் குமிதவிடு, நீடுசெம்பிற் காளிதமும்போல்"[55]
எனப் போற்றிப்பஃறொடை வெண்பா கூறியதும்,

அநித்தியமாகிய உலகம் நித்தியமாகத் தோன்றுவதற்கு சுத்தியானது அடித்துப் பழகியதால் வெள்ளிபோலத் தோன்றுவதையும், உலகமும் இறைவனும் வேற்றுமையின்றியிருப்பினும் வேறுபடத் தோன்றுவதற்குச் சிலம்பியும் அது வெளிப்படுத்தும் நூலும் ஒன்றாயினும் வேறுபடத் தோன்றுவதையும், உலகம் பல தன்மைகளிற் காணப்படுவதற்கு, இலை, பழம், பூ, காய், தோல், நார், வயிரம் இவையெல்லாம் ஒரு பொருளாகிய மரம் கொண்டிருப்பதையும், தண்ணீரானது திவலை, குமிழி, நுரை, திரை ஆகியவற்றைக் கொண்டிருப்பதையும் உவமைகளாக கொண்டு,

"தொகுதி யாக்கைப் பகுதியது ஒருபுடை
சுத்தி வெள்ளி யொத்தென மித்தையில்
தானென லாகும் தன்மைத்து, உலூ தையில்
சின்னூல் தகையின் வேற்றுமை யரீஇயது
என்னப், பன்மைய தெனின்இலை பழம்பூத்
தோல்நார் வயிரந் தருத்தருந் தொன்மையின்
வான்நா ரந்திரை நுரைதரு வாய்மையின்
கூடும்"[56]

எனச் சங்கற்ப நிராகரணம் கூறியதும் சிறந்த உவமை வெளிப்பாடுகள் என்னலாம்.

53. திருக்குறள், 22.
54. திருவருட்பயன், 11.
55. போற்றிப் பஃறொடை, கண்ணி, 7.
56. சங்கற்ப நிராகரணம் 13 — 20

3. உருவகம்

இனி உருவக முறையிலும் கருத்து விளக்கம் காணலாம்.

ஓர் அரசகுமாரன் தன் தந்தையை விட்டுக் காட்டுவழி வந்தான். அவனை வேடர்கள் தம் வசப்படுத்தித் தம் விருப்பம் போல் வளர்த்தனர். அவன் அவர்கள் வயத்தனாய் வளர்ந்த போது, அரசனால் அனுப்பப்பட்டு ஆங்குவந்த ஒருவன், அச் சிறுவன் அரசகுமாரன் என்பதை அறிந்து அவனைப் பார்த்து, அவன் யார் என்பதையும் எங்கு வளர்கின்றான் என்பதையும் தெரிவித்து, இனி அவன் அரசன் பால் சேரவேண்டிய வழிகளை யும் கூறி அவனை அரசன்பால் சேர்த்தான். இது ஒருகதை. இக்கதையையே மேற்கொண்டு, உவமை வாயிலாக (உருவக நிலையில்), ''இறைவனை விட்டு நீங்கிய உயிர், உலகில் வந்து ஐம்புலன்களால் தம் வயப்படுத்தப்பட்டு, உழலும்போது, இறைவனே குருவாகவந்து வெளிப்பட்டு, அவ்வுயிரின் இயல்பு களையும், உலக இயல்புகளையும், புலன்களின் கொடுமைகளையும் விளக்கிப் புலன்களினின்றும் தப்பித் தன்னையடையுமாறு அருள் செய்வார்'' என்ற கருத்தினைவிளக்கினார் மெய்கண்டார்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.[57]

என்பது அவரது வாக்கு. இதையே அவர் மாணவர் அருணந்தி சிவாசாரியார்,

மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமா போலே
துன்னியஐம் புலவேடர் சுழலதனிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.[58]

என்று அந்நூற்பாவுக்கு விளக்கவுரை வகுப்பதுபோல் தெளிவு படுத்தினார்.

57. சிவஞானபோதம் — 8.
58. சிவஞான சித்தியார் — சுபக்கம், 253.

இனி உவமையும் பொருளுமாகவோ, பொருளே உவமம், செய்யும் உருவகமாகவோ இன்றி, உவமையை மட்டும் கூறிப் பொருளைப் பெறவைக்கும் ஒட்டணி வகையினாலும் கருத்து களை விளக்குதலும் உண்டு என்பதற்கோர் சான்று காணலாம்.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழம் உண்ணாதே யுந்தீபற.[59]

என்பதைக் காணலாம். "ஆன்மாவாகிய கொடியில் ஆசையாகிய கொடிபடர்ந்து அத்திப் பழங்களாகிய இன்பதுன்பங்கள் மிகுதியும் உளவாயின. அவ்வின்ப துன்பங்களில் அழுந்தாதே" என்பது அதன் பொருள்.

4. எடுத்துக்காட்டு தருதல்

சொல்லும் கருத்துக்கு எடுத்துக் காட்டு தந்தும் அதை வலி யுறுத்துவர் சான்றோர்.

சிவஞானம் கைவரப் பெற்றவர்களுக்குள்ள கரணங்கள் (கருவிகள்)யாவும் மற்றவர் கரணங்கள்போல் இல்லாமல் அவர்கள் வழி நின்று ஏவினசெய்யும் என்பதற்குச் சம்பந்தர் பாலை வனத்தை நெய்தல் நிலமாகுமாறு செய்ததையும், அப்பர் பெரு மான் அப்பூதியடிகளின் மகனை நஞ்சுநீக்கி உயிர்ப்பித்ததையும் சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்ததையும் எடுத்துக் காட்டியது திருக்களிற்றுப்படியார்.

பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங் கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்.[60]

என்பது அதன் 12-ஆம் பாடல்.

5. மேற்கோள் கூறுதல்

"முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்" என்பதற்கு ஏற்ப முன்னோர் கூற்றுகளையும் கூறிக் கருத்தை வலியுறுத்தினர் சாத்திர நூலார்கள்.

---

59. திருவுந்தியார், 41.

60. திருக்களிற்றுப்படியார், 12

(1) சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் — சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று[61]

என்ற திருக்களிற்றுப்படியாரின் முதல்வரி,

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்[62]

என்ற குறளை மேற்கொண்டதாம். அந் நூலிலேயே,

(2) வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது — வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.[63]

என்ற பாடல்,

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்[64]

என்ற குறளை மேற்கொண்டதாம்.

(3) "காண்பார் யார்கொல் காட்டாக் காலெனும்
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞா னத்தின்
ஆட்பா லவர்க்கருள் என்பதை யறியே"[65]

என்ற இருபா இருபஃதின் 2ஆம் பாடல் வரிகளில் வந்துள்ள "காண்பார் யார் கொல் காட்டாக்கால் எனும் மாண்புரை" என்பது, அப்பர் பெருமானின், 'ஆட்டுவித்தா லாரொருவர் ஆடா தாரே'[66] எனத் தொடங்கும் பாடலில் வந்த "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்ற வரியை மேற் கொண்ட

61. திருக்களிற்றுப்படியார், 41.
62. திருக்குறள், 349.
63. திருக்களிற்றுப்படியார், 40.
64. திருக்குறள், 352.
65. இருபா இருபஃது, 2.
66. திருநாவுக்கரசர் தேவாரம், 3,95:8.

தாம். மேலும் "ஆட்பாலவர்க்கருள் என்பதை யறி" என்பது, சம்பந்தப் பெருமானது "ஆட்பா லவர்க்கருள் வண்ணமும்"[67] என்ற பாடலை மேற்கொண்டதாம்.

(4) பெரிய புராணத்து வந்த மனுச் சோழன் வரலாறு அதாவது பசுவின் துயரைத் தானும் அனுபவிக்கவேண்டும் எனவும் தன்மகன் செய்த கன்றுக் கொலைக்கு நரகதுன்பம் அனுபவிக் காமல் தானே தண்டனை வழங்கி அப்பாவத்தைப் போக்கவும் எண்ணிய மனு நீதிச் சோழன், தன் மகனைத் தேர்க் காலில் உயிர் இழக்கச் செய்த செயல் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது போற்றிப் பஃறொடை வெண்பாவில். எமதூதர் கொடிய பாவம் செய்த உயிர்களை வாதனைப் படுத்துவதை இறைவனும் அருட் சக்தியும் கண்டு நிற்பது, அவ்வுயிர்களுக்கு மலவாதனை எப்படி யேனும் நீங்கவேண்டும் என்ற கருணையேயாம் என்பதற்கு மேற் கோளாகக் கொள்ளப்பட்டது. சோழனின் எண்ணம் மகனின் பாவம் தொலைய வேண்டும் என்பது. இதனை,

"... ... ... வாய்த்தநெறி
ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடு பெரும்பாவம்இன்றே நீங்குமென — நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்தூதர் — வெஞ்சினத்தால்
அல்ல லுறுத்தும் அருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி"[68]

எனக் கூறியது அந்நூல்.

(5) "உன்னை யொழிய உறவில்லை என்னுமது
தன்னை யறிவைத் தனையறிவை — முன்னம்
தலைப்பட்டார், தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று — நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் — ஐவர்க்கும்
ஆவதுவே செய்தங் கவர்வழியைத் தபபாமல்
பாவமெனும பவ்வப் பரப்பழுந்தி"[69]

எனவரும் நெஞ்சுவிடு தூதில் "தலைப்பட்டார்...... மற்றையவர், என்ற குறள் முழுமையும் மேற்கொள்ளப்பட்டது காண்க.

---

67. சம்பந்தர் தேவாரம், 3.54:4
68. போற்றிப்பஃறொடை, கண்ணி, 51.
69. நெஞ்சுவிடு தூது, கண்ணி, 24.

6. குறிப்பு மொழிகள்

எளிதிற் பொருள் விளங்கிக் கொள்ள முடியாதனவும் உரைகளினாலேயே பொருள் விளங்கும்படியமைவனவும் ஆன குறிப்பு மொழிகளையும் சாத்திர நூலார் கையாண்டார்.

(1) உலகம் ஒடுங்குதற்கிடமான இறைவனை 'ஒடுங்கி'[70] என்ற சொல்லால் குறித்தார் மெய்கண்டார்.

(2) தத்துவங்களில் அடங்கிக் கிடக்கும் 'உயிரை' 'மூலையிருந்தார்' என்றும்,[71] சிவானுபவத்தை 'முற்றம்' என்றும்,[72] அநாதியேஉயிருடன் கலந்த திருவருளைக்'கிடந்தகிழவி'[73]என்றும், ஆணவத்தை 'இரவு'[74] என்றும், மாயையைப் 'பகல்'[75] என்றும் ஞானாசாரியனை 'வித்து'[76] என்றும், பாசஞான பசுஞானங்களை 'முளை'[77]என்றும் கூறினார் திருவுந்தியாருடையார்.

(3) விருப்பு வெறுப்பற்ற நிலையைச் 'சோம்பு'[78] என்றும் திருவருளைச் 'சேயிழை'[79] என்றும் கூறும் திருக்களிற்றுப்படியார்.

(4) உயிர் கருப்பத்தில் இருக்கும் காலத்தைப் "பாளைப் பசும்பதம்"[80] என்றது போற்றிப் பஃறொடை வெண்பா.

7. சொல்லாட்சி

மேற்காட்டிய குறிப்பு மொழிகளையே சொல்லாட்சிக்கும் கொள்ளலாம். மேலும் சில:

(1) "நின்மலன் ஆயிட்டு"[81] (இருபா இருபஃது). ஆயிட்டு என்பதற்கு, எழுவாய் 'நீ' என்பது. 'நீ ஆயிட்டு' எனனுமிடத்து

---

70. சிவஞானபோதம், 1.
71. திருவுந்தியார், 12.
72. மேற்படி, 12.
73. மேற்படி, 15.
74. மேற்படி, 20.
75. மேற்படி, 20.
76. மேற்படி, 28.
77. மேற்படி, 28.
78. திருக்களிற்றுப்படியார், 39.
79. மேற்படி, 66.
80. போற்றிப்பஃறொடை, கண்ணி, 23.
81. இருபாஇருபஃது, 4,26.

'நீ ஆனாய்' என்னும் பொருள் வரும். 'ஆனாய்' என்பது 'ஆயிட்டு' என வருவது அரிய வழக்கு. அவன் ஆயிட்டு, யான் ஆயிட்டு என வரின் அச்சொல் பொதுச்சொல்லாம். இவ்விடத்து ஆதலினால் எனக் காரணப் பொருளில் வந்தது.

(2) "ஆன்மா அணைந்து இன்பக் கண்ணில் அழுந்தியிடும்"[82] இவ் உண்மை விளக்கத் தொடரில் 'இன்பக்கண்' என்பது அரிய வழக்கு. இன்பம் + கண்: இன்பத்துக்கண் என அத்துச் சாரியை சேர்ந்து வருவது பெரும்பான்மையான வழக்கு. இங்குச் சாரியை யின்றி வந்துள்ளது.

(3) சிறியவழி என்பதை 'ஐயவழி'[83] என்ற தொடரில் குறிப் பிடுகின்றது போற்றிப்பஃறொடை வெண்பா (18). 'ஈத்து' என்பதை எதுகைக்கு ஏற்ப 'ஈய்த்து' என்றாள்கிறது அந்நூல்.[84]

(4) "பல்கருவி வாரில் அகப்பட்டு மயங்கினேன்"[85] என நெஞ்சு விடு தூதில் வந்த வரியில், "பல்வகையான தத்துவங்களின் ஆதாய சூழ்ச்சியிற் பொருந்தி மருண்டேன்" எனப் பொருள் காணுமிடத்து 'வாரி' என்பது 'சூழ்ச்சி' என்ற பொருளில் ஆண்டது அரிய வழக்கு 'மாடை' என்பது. பொருள்களை யுணர்த்துவதும் அப்படியே.[86]

IV

சிறப்புச் செய்திகள்

இனிச் சாத்திர நூல்களின் மூலமாக நாம் அறியலாகும் சிறப்புச் செய்திகள் காணலாம்.

1. *நந்திமரபு*

திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்றவர் சனற்குமார முனிவர்; அவரிடம் சத்தியஞானதரிசினிகள் என்பவரும், அவரிடம் பரஞ்சோதி முனிவர் என்பவரும் உபதேசம் பெற்றனர். இந்நால் வரும் அகச்சந்தானம் (அகவழியினர்) எனப் பெறுவர்.

பரஞ்சோதி முனிவரால் உபதேசிக்கப் பெற்றவர் மெய் கண்டார். அவரால், அருணந்தி சிவாசாரியாரும், அவரால் மறை

82. உண்மைவிளக்கம், 47.
83. போற்றிப்பஃறொடை, கண்ணி, 18.
84. மேற்படி, கண்ணி, 50.
85. நெஞ்சுவிடுதூது, கண்ணி, 22.
86. மேற்படி, கண்ணி, 62.

ஞானசம்பந்தரும், அவரால் உமாபதி சிவாசாரியாரும் உபதேசிக்கப் பெற்றனர். இவர் நால்வரும் புறச்சந்தானம் (உலகில் வந்த வழி வழியினர்) எனப் பெறுவர். அகச் சந்தானத்தில் நந்தி தேவராக ஸ்ரீகண்டபரமேஸ்வரனே எழுந்தருளினார் ஆதலின் ஸ்ரீகண்ட பரமேசுவரனை முதலாகக் கூறுவதும் உண்டு. எங்ஙனமாயினும் இப்பரம்பரை நந்தி பரம்பரை எனப்படும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் முதல் இரண்டையும் செய்த திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரும் அச்சந்தானங்களில் சேர்க்கப்படவில்லை. ஆனால் அவர்கள் நூல்கள் மட்டில் முதல் இரண்டாகச் சேர்க்கப்பட்டன. இதன் காரணம் என்னென்று புலப்பட்டிலது ஒருகால், அவ்விருவரும் உலகினர் அறியுமாறு சித்துச் செய்திகளோ திருவருட் செயல்களோ செய்யாமையால் சேர்க்கப்பட்டிலரோ என்று ஐயுறுவாரும் உளர்.[87] அகச்சந்தானத் தொடர்பு இல்லாததும் காரணம் ஆகலாம்.

அது எவ்வாறாயினும் திருக்களிற்றுப் படியார் பாடிய திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்,

> இக்கணமே முத்தியினை எய்திடினும் யான்நினைந்த
> அக்கணமே ஆனந்தத் தழுந்திடினும் — நற்கணத்தார்
> நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை நந்திக்கும்
> ஆயிருத்த லன்றிபிலே னியான்.[88]

எனக் கூறியிருத்தலின் இவரும் நந்தி மரபினரே என்னலாம். இவர் அருளிச் செயல்கள் அறியப்படாது மறைந்தது போலும். இவருடைய குருவாகிய திருவியலூர் உய்யவந்ததேவநாயனார்க்கும் இவர்,

> "... ... ... காலத்தால்
> தாளைத்தந் தென்பிறவித் தாளை அறவிழித்தார்க்கு
> ஆளன்றி யென்மா றதற்கு"[89]

எனக்கூறி அடிமை என்றலின் அவரும் நந்திமரபினரே என்னலாம். அதற்கேற்ப அவர் சிவனை,

87. டாக்டர் வை. இரத்தினசபாபதி.
88. திருக்களிற்றுப்படியார், 98.
89. மேற்படி, 97.

சிந்தையி னுள்ளும்என் சென்னி யிலும்சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற[90]

எனப்பாடியதும் காண்க.

உய்யவந்த தேவநாயனார் இருவரும் நந்திமரபில் சேர்க்கப் படாமைக்கு உமாபதி சிவாசாரியார் வாக்கு ஒரு காரணமாக இருக்கலாமோ?

தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி அவர்கணத் தோர் செல்வர் பாரில்
பாவிய சத் தியஞான தரிசினிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
நாவிலருள் மறைஞான சம்பந்தர் இவரிச்
சந்தானத் தெமையாளும் தன்மை யோரே.[91]

எனத் தமது சிவப்பிரகாசத்தில் கூறியிருப்பது காரணம் ஆகலாமோ? இவர், 'ஓர் செல்வர்' என்றது சனற்குமார முனிவரை. புறச் சந்தானத்துள் தமக்குமுன்னர் மூவரையே குறித்திருக்க இவரையும் சேர்த்துப் பின்வந்தோர் நால்வர் என்றனர். அதற்குக் காரணம் "இவர் இச்சந்தானத்து எமையாளும் தன்மை யோர் என்று கூறியதேயாகலாம். இவர் காலத்தில் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் கிடைக்கப் பெறவில்லையா? அவ் விருவரையும் இவர் விட்டமைக்குக் காரணம் என்ன?[92] இவர் கூற்றைக் கொண்டுதான் புறச்சந்தான மரபை மெய்கண்டமரபு என்றார்கள் போலும்.

உமாபதி சிவாசாரியார்க்குப் பின் அவர் மாணவர் அருள் நமசிவாய தேசிகர், அவர் மாணவர் சித்தர் சிவப்பிரகாசர், அவர் மாணவர் திருவாவடுதுறை யாதீனத்து மூல குரவராகிய நமச்சிவாய மூர்த்திகள்—இப்படித் தொடரும் மாணவர் வழி வழியை—மரபைத் தொடராமல் உமாபதி சிவாசாரியாரோடு சந்தான மரபைப் பின்வந்தோர் நிறுத்தியதற்குக் காரணம்

90. திருவுந்தியார், 44.
91. சிவப்பிரகாசம், 5
92. அறிவழியும் அன்பை வலியுறுத்தியவர்கள் முதல் இருவர். அவர்களுக்கு அனுபவமே அடிப்படை. அனுபவ உண்மைகளை அறிவுக்குப் பொருத்தமாக எடுத்துக் கூறி அறிவை விளக்கும் பணியினர் மற்றவர். இதுவும் காரண மாகலாம் என்றும் கூறினார் டாக்டர் வை. இரத்தின சபாபதி.

என்ன? காப்பியமா, ஐந்து; நாயன்மார்களா, அறுபத்துமூவர்; சமயகுரவரா, நால்வர்; திருமுறைகளா, பன்னிரண்டு. இப்படித் தொகை கொடுத்து மேலும் வளர விடாதபடித் தடுக்கும் இயல்பு மரபாகவே வருவதுபோலப் புறச்சந்தானமும் நான்கு என்றனர் போலும்.

2. குருவே சிவபரம் பொருள்

சிவபரம்பொருள் உயிர்களை உய்விக்கக் குருவடிவாக வரும் என்று சாத்திரங்கள் செய்த ஆசாரியர்கள் தம் குருவினை அச்சிவமாகவே கருதி வழிபட்டுள்ளனர். அன்றியும் சிவபிரானுக் குரிய வடிவமைப்பிலேயே குருவை வழிபட்டனர் என்றும் கூற லாம்.

"கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான்"[93]

"தெருள அருளும் சிவபெரு மானே"[94]

என அருணந்தி சிவாசாரியார் தமது குருவாகிய மெய்கண்ட தேவரை இருபா இருபஃதில் கூறியதும்,

"ஏற்றின் புறத்தமைந்த எங்கோமான்"[95]

என உமாபதிசிவாசாரியார் தமது குருவான மறைஞான சம்பந்தரைத் தமது நெஞ்சு விடுதூதில் கூறியதும் காணலாம்.

இம்முறையைப் பின்பற்றியே 17-ஆம் நூற்றாண்டுப் புலவராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்ற வீரசைவப் பெரியார், தமது குருவாகிய மயிலம்—பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகளை, நெஞ்சு விடுதூது, பிள்ளைத் தமிழ், தாலாட்டு, கலம்பகம் முதலிய நூல்களில் சிவபரம் பொருளாகவே பாடியுள்ளார்.

3. வல்வினை மெல்வினை

சிவனடியார்கள் செய்த திருத்தொண்டினை வல்வினைத் தொண்டு என்றும், மெல்வினைத் தொண்டு என்றும் பாகுபடுத்தி னார் திருக்களிற்றுப்படியுடையார்.

---

93. இருபாஇருபஃது 1.
94. மேற்படி, 14.
95. நெஞ்சுவிடுதூது, கண்ணி, 85.

"மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும்—சொல்லிற்
சிவதன்மம் ஆம்"[96]

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும்—வேதியனே
நல்வினையாம் என்றே நமக்கும்எளி தானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு.[97]
வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யும் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநான் மற்று.[98]

என்று கூறிய அவர், வல்வினை செய்த அடியார்களாகத் தாதை யைத் தாளெறிந்த சண்டீசரையும், பூட்டி அரிவாள் ஊட்டியரிந்த அரிவாட்டாயரையும் எடுத்துக்காட்டியதும் காணலாம்.

ஐந்தெழுத்து ஓதும் முறை

சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்—இவனின்று
நம்முதலா ஓதில் அருள்நாடாது நாடுமருள்
சிம்முதலா ஓதுநீ சென்று.[99]

என்பது உண்மை விளக்கம்.

சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி.[100]

என்பது திருவருட்பயன். ஐந்தெழுத்தை, 'நமசிவாய' எனவும், 'சிவாயநம' எனவும் ஓதலாம். முதலாவது இம்மைப் பேறும், மலம் நீங்குதற்கு ஏற்ற பிறப்பும் தரும். இரண்டாவது சிவப் பேற்றினை யளிக்கும். முதலாவது சிவப்பேற்றை யளிக்காது.

---

96. திருக்களிற்றுப்படியார், 16.
97. மேற்படி, 17.
98. மேற்படி, 18.
99. உண்மைவிளக்கம், 41.
100. திருவருட்பயன், 87.

ஆதலின் 'சி' முதலாகவுள்ள இரண்டாவதையே ஓதுதல் வேண்டும்.

இங்கு ஓர் ஐயம் எழலாம். நமச்சிவாயப் பதிகம்[101] அப்பர் பெருமானால் பாடப்பட்டதே. அதனாற் பயன் உண்டா இல்லையா என்பதாம். பயன் உண்டு. 'நமச்சிவாய' என்பதை மந்திரமாகக் கருதாமல் சிவபிரான் திருப்பெயர்களுள் ஒன்றாகக் கருதுதல் வேண்டும். கருதினால் சிவபிரான் திருப்பெயர்களை ஓதினால் பெறலாகும் பயன்களை 'நமச்சிவாய' என்பதை ஓதினாலும் பெறலாம். மக்கள் நமச்சிவாயன் எனப் பெயர் வைத்துக் கொள்வது அது சிவபிரானின் பெயர் என்பதாலேயே. மந்திரமாகக் கொண்டு வைக்கவில்லை. மந்திரமாகக் கொண்டு வைப்பரேல் 'சிவாயநம' என்றும் மக்கள் பெயர்வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி வைக்கக் காண்கிலோம்.[102]

5. நடராசர் திருவுருவம்

நடராசப் பெருமானின் திருவடியில் 'ந' உந்தியில் 'ம தோளில் 'சி', திருமுகத்தில் 'வ', திருமுடியில் 'ய' ஆக ஐந் தெழுத்தும் அமைந்துள்ளன. இது திருவுருவம்.[103] துடியுள்ள கையில் 'சி', வீசிநின்ற கையில் 'வ', அபயம் அளிக்கும் கையில் 'ய நெருப்பேந்திய கையில் 'ந', கீழ் ஊன்றிய திருவடியில் 'ம' ஆக அமைய நடம் ஆடுவான்.[104] திருவாசி என்பது ஓங்கார வடிவாம்.[105]

துடியுள்ள கைமூலம் உலகப் படைப்பும், அபயமளிக்கும் கை மூலம் காப்பும், நெருப்பேந்திய கைமூலம் அழிப்பும், ஊன்றிய திருவடிமூலம் மறைப்பும், தூக்கிய திருவடிமூலம் அருளலும் நடத்துவான்.[106]

துடிக்கையினால் ஆன்மாவின் மாயையை நீக்கியும், நெருப்புக் கையால் கன்மமலத்தை எரித்தும், ஊன்றிய பாதத்தால் ஆணவம்

101. திருநாவுக்கரசர் தேவாரம், 4:1.
102. திருவருட்பயன் 85இன் உரைவிளக்கம், ப. இராமநாத பிள்ளை.
103. உண்மை விளக்கம், 32.
104. மேற்படி, 33.
105. மேற்படி, 34.
106. மேற்படி, 36.

மேலிடாமல் அழுத்தியும், தூக்கிய பாதத்தால் அருளே வடிவாக நிறுத்தியும், அபயக் கையினால் ஆனந்தத்தில் அழுத்தியும் இன்ப மளிப்பதே திருக்கூத்தின் உண்மைப் பொருளாம்.[107] மனவாசகங் கடந்தாரின் உண்மை விளக்கம் இப்படிக் கூறும்.

6. *நரகின் கொடுமை*

நாமறியாத நரகம் என்ற உலகில் பாவிகளுக்கு நிகழும் கொடுமைகளை விவரிக்கின்றது போற்றிப்பஃறொடை வெண்பா

"செக்கினிடை திரித்தும் தீவாயில் இட்டெரித்தும்
தக்க நெருப்புத்தூண் தழுவுவித்தும்—மிக்கோங்கு
நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும் நாவரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்றடித்தும்—பேராமல்
அங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாத வேட்கையராய்—இங்கொருநாள்
எண்ணிமுதற் காணாத இன்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு"[108]

எமதூதர் செய்யும் கொடுமைகள் இதில் கூறப்பட்டமை காண்க

7. *சமய சாத்திர நூல்கள்*

சமய சாத்திர நூல்கள் கடவுளைப் பற்றி, உயிர்களைப் பற்றி உலகைப் பற்றி ஒன்று சொன்னபடியே மற்றொன்று சொன்ன தில்லை. 'இதுதான் பொருள்' என்று உறுதிப்படுத்தவில்லை. அதனால்தான் சமயவாதங்கள் மிகுந்தன. அவற்றின் எதிர் வாதங்களும் மிகுந்தன. எனவே சாத்திர நூலறிவைக் கொண்டு இறைவனை யறியவோ அடையவோ முடியாது. அனுபவத் தாலேயே முடியும் என்ற முடிபுக்குத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் வந்தார். அவர் சொல்லை யேற்காதவர்களும் இருந்தனர். அதனால் அவர்,

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் — இன்றுரைக்க
என்னால் இயன்றிடுமோ என்போல்வார் ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ சொல்.[109]

107. உண்மை விளக்கம் 36.
108. போற்றிப் பஃறொடை, கண்ணி, 45—48.
109. திருக்களிற்றுப்படியார், 81.

என்றார். அருணந்தி சிவாசாரியார் மற்றைச் சமயவாதிகளின் கொள்கையையும் ஏற்றவராய்,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்"[110]

என்று அமைதிகூறிப் பின்னர் மற்றைத் தெய்வங்களைப் பற்றி,

"அத்தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்குமேல் வினையும் செய்யும்
ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே"[111]

என்று தம் கருத்தையும் தெரிவித்தார்.

உமாபதி சிவாசாரியார் காலத்தில் பழைய சாத்திர நூல்களுக்கே மதிப்பிருந்தது. அவர் காலத்து எழுந்த நூல்களைச் சமயச் சான்றோர் புறக்கணித்தனர். சைவசமயத்தும் அப்படியே அவர் செய்த நூல்களை ஒருகால் புறக்கணித்தனரோ என்றும் ஐயுறலாம். அதனால் அவர்,

தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
தன்மையினார் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர்; நடுவாந்
தன்மையினார் பழமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர்; ஏதிலருற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனவொன்
றிலரே[112]

இப்படிப் பாடினார் போலும்.

8. முத்தி நிலையில் ஆணவமலம்

ஓர் உயிர் மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்று, அதனால் அதனிடமாகச் சிவம் பிரகாசிக்கச் சீவன் முத்தன் என்ற நிலையில் இருக்கும் போது, உயிரை அநாதியே பற்றிநின்ற ஆணவ மலமானது அந்தச் சீவன் முத்தனின் உடம்பில் தன் ஆற்றல் மட்டும் அழிந்து தான் அழியாமல் நின்று, அவ்வுடம்பு அழியும்போது, அவ்வுயிர் வீடடைதலின் —மறு பிறவி யெடுத்தலில்லாமையின் அதனுடனே தானும்

110. சிவஞானசித்தியார் சுபக்கம், 114.
111. மேற்படி, 114.
112. சிவப்பிரகாசம், 12.

அழியும். எனவே முத்தி நிலையில் ஆணவம் அறவே இல்லை. எதுபோல எனின், அரிசியொடு நெல் என்ற பெயரில் அநாதியே பற்றிவந்த முளை தவிடு என்பன நீங்கியபோது அரிசி தனித்து நிற்க அவை அழியும்[113] அதுபோல என்க'' என அருணந்திசிவாசாரியார் கூறினர்.

முத்தியில் ஆணவம்அழியும் என்றால் மலம் நித்தியப் பொருள் என்பதற்கு மாறுபடுமே என்ற வினாவுக்கு, ''வீடடைந்த உயிரின் நீங்கி யழியினும் மற்றையுயிர்களிடமாக இருத்தலின் நித்தியம்'' என்பர் சிவஞான முனிவர்.[114]

உமாபதி சிவாசாரியார், ''முத்திநிலையின் ஆணவம் அழியும் என்றால் நித்தியம் என்பதொடு மாறுபடும்; அழியாது என்றால், உயிர்ஞானம் அடையாது; அதனால் அது தன்சக்திமட்டும் அழிந்து தன்னுடைய நித்தியத் தன்மை அழியாது நிற்கும்; எது போல என்னின் ஒளியின்முன்னர் இருள் அழிவதுபோலத் தோன்றினும் தான் அழியாமலும் வேறிடத்தில் மறையாமலும் ஒளியில் அடங்கியதுபோல என்க'' என்றார்.[115]

இவ்விருவர்க்கும் மாறாக, மனவாசகங் கடந்தார், 'முத்தி நிலையிலும் ஆணவம் அழியாமல் தொழில் புரியும், என்றார். பசு, பதி, பாசம் இவற்றின் இயல்பு முத்தி நிலையில் எவ்வாறு அமைகின்றது என்பதை,

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தலணு; — மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை; இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொளப் பா.[116]

என விளக்கினார். 'முத்திநிலையில் உயிருக்கு வீட்டின்பத்தைத் துய்க்கும்படியாகச் செயல்புரியும் ஆணவம்' என்பது அவர் கருத்து.

முத்தியில் அழிந்தே போகும் என்பவர்க்கும், தன் ஆற்றலழியுமே தவிரத் தான் (நித்தியத்தன்மை) அழியாது நிற்கும் என்பவர்க்கும் மாறாக, 'முத்தியின்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் செயல் செய்யும் ஆணவம்' என்ற மனவாசகங் கடந்தார் வாக்கு சிந்தித்தற்குரியது.

---

113. சிவஞான சித்தியார் சுபக்கம், 215.
114. மேற்படி, 215, பொழிப்புரை.
115. சிவப்பிரகாசம், 88.
116. உண்மைவிளக்கம், 50.

ஆணவ மலம் பேரின்பத்தை விளைவித்தல் என்பதற்கு விளக்கமாகக் கழகப் புலவர் ப. இராமநாதபிள்ளை பின்வருமாறு எழுதினர்.

"விளைவித்தல் என்பது ஏதுவாதல் மாத்திரையே. நோயுடையான் ஒருவன் படுந் துன்பங்கண்டு அந்தண்மை வாய்ந்த மருத்துவன் ஒருவன், தக்க மருந்து நல்கி, அந்நோயினைப் போக்கி நலத்தினை இன்புறச் செய்கின்றான். ஆனால், அவ்வின்பம் அந் நோயாளனுக்கு மருத்துவனால் ஏற்பட்டதேயன்றி அந்நோயினாலன்று. மருத்துவனால் இன்பம் ஆக்க நோய் ஏதுவாயிருந்தது. அது போன்றே மலமும்" என்பது அவர் எழுத்து[117]

டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்களிடம் உரையாடிய போது முத்தி நிலையில் ஆணவம் பேரின்பத்தை உயிர் அனுபவிக்கும்படி விளைவித்துக் கொண்டிருக்கும் எனத் தம் கருத்தைக் கூறினார்.

இக்கருத்தை ஒட்டியே இதற்கு ஓர் உவமை கூறலாம். மாந்த நோயுள்ள குழந்தைக்குப் பால் புகட்டினால் அப்பால், அக்குழந்தையின் நோயை மிகுதிப்படுத்தும். அப்பாலே பசியுள்ள குழந்தைக்குப் புகட்டினால், அக்குழந்தைக்கு மனநிறைவை மகிழ்வினையுண்டாக்கும். பால் குழந்தையின் உடல்நிலைக்கேற்ப இருவகையில் செயல்புரிகிறது. அதுபோல ஆணவமும், மாயை கன்மங்களால் அஞ்ஞானம் கொண்டிருக்கும் ஆன்மாவை அவ்வஞ்ஞானத்தையே மிகுவித்துப் பிறவிகளில் ஆழ்த்தும். மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றிருந்தால், மெய்ஞ்ஞானத்தின் பயனாகிய பேரின்பத்தை மிகுவிக்கும். அப்போது அஞ்ஞானத்தை மிகுவிக்கும் செயல் இல்லை. முத்தி நிலையில் ஆணவம் அழியும் என்றது, அஞ்ஞானத்தை மிகுவிக்கும் செயல் அழிவதையே கொள்ளவேண்டும். சைவசித்தாந்திகள் இதுபற்றி மேலும் விளக்கம் தரலாம்.

தொகுப்புரை

இது காறும் கூறிவந்தவற்றிலிருந்து பெறப்படுவன வாவன:

1. இலக்கியம் என்பது இல்லறவாழ்வின் குறிக்கோளை இயம்புவது.
2. தமிழன் அகம், புறம் என வகுத்துக் கொண்டது முதல் தமிழ் இலக்கியக் கொள்கையாம்.

---

117. மேற்படி, 50, உரைவிளக்கம், ப. இராமநாதபிள்ளை.

3. இலக்கியம் மூலம் கண்ட இலக்கணப்படியே இலக்கியங்கள். படைக்கப்பட வேண்டும்.

4. காலத்துக்கேற்ப இலக்கண விதிகளை மீறலாம்.

5. பல்வேறு துறைகளில் இலக்கியம் படைக்கலாம்.

6. தோத்திர சாத்திர இலக்கியங்களும் படைக்கலாம்.

7. இன்றைய ஆய்வாளர் முடிபில் இலக்கியம் என்பதுபொருள், புறநிலையமைப்பு, வெளியீட்டுமுறை ஆகிய மூன்றமைப் புடையதாக இருத்தல் வேண்டும் என்பது.

8. சைவசித்தாந்த சாத்திர நூல்களில் அவை அமைந்தவாறு,

9. நந்தி மரபில் உய்யவந்த தேவநாயனார் இருவரும் சேர்க்கப் படாமைக்குக் காரணம்.

10. குருவே சிவம் என்பது, ஐந்தெழுத்து ஓதும் முறை, நடராசர் திருவுருவதத்துவம், சமயசாத்திர நூல்களின்மாறுபாடு, பிற

இணைப்பு 1.

திருவுந்தியார் கருத்துக்குரிய திருக்களிற்றுப்படியார் பாக்கள்:

உந்தி	—	களிறு	உந்தி	—	களிறு
1	—	4, 5	23	—	42 , 43
2	—	6, 7	24	—	44 , 45
3	—	8	25	—	46— 50
4	—	9, 10	26	—	51 , 52
5	—	11	27	—	53 —56
6	—	12,13	28	—	57
7	—	14—21	29	—	58— 62
8	—	22	30	—	63 , 64
9	—	23, 24	31	—	65 —68
10	—	25	32	—	69 —75
11	—	26	33	—	76
12	—	27, 28	34	—	77
13	—	29	35	—	78 , 79
14	—	30	36	—	80 , 81
15	—	31	37	—	82 , 83
16	—	32	38	—	84
17	—	33	39	—	85—91
18	—	34	40	—	92
19	—	35	41	—	93— 94
20	—	36, 37	42	—	95 , 96
21	—	38—40	43	—	97,98,99
22	—	41	44	—	100

(சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர், ப. இராமநாதபிள்ளை யவர்கள் தொகுத்தபடி.)

இணைப்பு 2.

நூலாசிரியர்கள் காப்பு, பாயிரம் ஆகியவற்றைக் கூறியேயாக வேண்டும் என்ற கட்டாயத்துக்குட்பட்ட வரல்லர்.

1. காப்பும் பாயிரமும் இல்லாத நூல்கள்.
    1. திருவுந்தியார்.
    2. திருக்களிற்றுப்படியார்.
    3. இருபாஇருபஃது.
    4. வினாவெண்பா.
    5. போற்றிப்பஃறொடை.
    6. நெஞ்சுவிடுதூது.
    7. உண்மைநெறி விளக்கம்.
    8. கொடிக்கவி.

2. காப்பு மட்டில் உள்ள நூல்கள்:
    1. உண்மை விளக்கம்.
    2. திருவருட்பயன்.

3. காப்பும் அவையடக்கமும் உள்ள நூல்.
    1. சிவஞானபோதம்.

4. காப்பும், வாழ்த்தும், பாயிரமும் உள்ள நூல்கள்:
    1. சிவஞானசித்தியார்.
    2. சிவப்பிரகாசம்.
    3. சங்கற்பநிராகரணம்.

இணைப்பு 3.

மறுக்கப்பட்ட மதவாதிகள்

1. சிவஞானசித்தியார் பரபக்கம்.
   1. உலகாயதன்
   2. சௌத்திராந்திகன்
   3. யோகசாரன்
   4. மாத்யமிகன்
   5. வைபாடிகன்
   6. நிகண்டவாதி
   7. ஆசீவகன்
   8. பட்டாசாரியன்
   9. பிரபாகரன்
   10. சத்தப் பிரமவாதி
   11. மாயாவாதி
   12. பாற்கரியன்
   13. நிரீச்சுர சாங்கியன்
   14. பாஞ்சராத்திரி.

2. சங்கற்ப நிராகரணம்.
   1. மாயாவாதி
   2. ஐக்கியவாதி
   3. பாடாணவாதி
   4. பேதவாதி
   5. சிவசமவாதி
   6. சங்கிராந்தவாதி
   7. நிமித்த காரண பரிணாம வாதி
   8. சைவவாதி.

இணைப்பு—4

சைவசித்தாந்த நூல்களின் பா வகைகள்

		உந்தி	களிறு.	போதம்	சித்தி	இருபா	உ.விள.	சிவப்.	திருவருட்.	வினா.	போற்றி	கொடி	நெஞ்சு.	உ.நெ.வி.	சங்க	மொ.
1.	நூற்பா	—	—	12	—	—	—	—	—	—	—	—	—	—	—	12
2.	தாழிசை	45	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	45
3.	குறள்வெண்பா	—	—	—	—	—	—	—	101	—	—	—	—	—	—	101
4.	வெண்பா		100	1	—	10	54	—	—	13	—	3	—	—	—	181
5.	பஃறொடை வெண்பா	—	—	—	—	—	—	—	—	—	1	—	—	—	—	1
6.	கலிவெண்பா	—	—	—	—	—	—	—	—	—	—	—	1	—	—	1
7.	ஆசிரியப்பா	—	—	—	—	10	—	—	—	—	—	—	—	—	21	31
8.	ஆசிரியவிருத்தம்	—	—	—	602	—	—	100	—	—	—	—	—	6	—	708
9.	கட்டளைக் கலித்துறை	—	—	—	—	—	—	—	—	—	—	1	—	—	—	1
10.	கலிவிருத்தம்	—	—	—	27	—	—	1	—	—	—	—	—	—	—	28
11.	வஞ்சித்துறை	—	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	—	1
		45	100	14	629	20	54	101	101	13	1	4	1	6	21	1110

துணை நூல்கள்

1. சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கும்.
2. அகத்தியர் — அகத்தியம்.
3. அருணாசலம்பிள்ளை, மு — தமிழ் இலக்கிய வரலாறு, 12—15 நூற்றாண்டுகள்,
4 இரத்தினசபாபதி, டாக்டர், வை—திருமுறைத் தெளிவே சிவ ஞான போதம்.
5. இளங்கோவடிகள் — சிலப்பதிகாரம்.
6. சாமிநாதய்யர், டாக்டர், உ. வே. நினைவு மஞ்சரி முதற் பாகம்.
7. சிவப்பிரகாசர் — நால்வர்நான்மணிமாலை.
8. சுப்பிரமணியன், டாக்டர், ச. வே. தமிழ் இலக்கியக் கொள்கை—1, தொல்காப்பியம்.
9. சேக்கிழார் — பெரியபுராணம்.
10. திருஞான சம்பந்தர் — தேவாரம்.
11. திருநாவுக்கரசர் — தேவாரம்.
12. திருநாவுக்கரசு, க. த. தமிழ் இலக்கியக் கொள்கை 1, பதினெண்கீழ்க்கணக்கு.
13. திருவள்ளுவர் — திருக்குறள்.
14. தொல்காப்பியர் — தொல்காப்பியம்.
15. பவணந்தி முனிவர் — நன்னூல்.
16. மாணிக்கவாசகர் — திருவாசகம்.
17. வரதராசன், டாக்டர், மு — இலக்கியத்திறன்.